(இ-ள்) லக்கினாதிபதிகள் இரண்டாமிடத்திலிருக்க மற்ற கிரகங்கள் அஷ்டமஸ்தானத்தில் ஆக்ஷி உச்சமாய்வாகனஸ்தானமாகிய நாலாமிடத்திலிருந்தாலும், தன்னிடமிருந்த தனதான்யம் பொன்பொருளும் போவதுடன் பலவிதமான அலைச்சலும் கஷ்டமும் துன்பமும் நேரிடுவதுடன் அற்பாயுசாயிருக்கும் எ-று 211

நாலுகால் செவ்வாய் நிற்க நடுவதிற்சோமன்மந்தன்
மேலுகந்தரசன் சுங்கன் மேலன்றியஸ்தமிக்கில்
ஏலுடனுகைத்தானு மிராப்பகை வீட்டானெட்டில்
ஆலுசுந்தமர்ந்தமாதே யன்னை யுங்குழவிசாமே

(இ-ள்) கிரகங்கள் கேந்திரகோணமாய் சேருமுருபல்லாமல் ஆசி உச்சமானாலும் சுபகிரகங்கள் சுபஸ்தாத்திலிருந்தாலும் சஷ்டாஷ்ட ஸ்தானத்திலிருந்தால் ஜாதகனுக்கு வறுமை சூழ்ந்து பொன் பொருள் பூஸ்தியெல்லாம் போவதுடன் அற்பாயுசாயிருப்பதற்காகும் எ-று 212

முந்தியோருதையத்தானும் முழுபிறையிடத்தனெட்டோன்
பிந்தியேசனியும் வீட்டான் பெலவீனமாக நல்லோர்
வந்திருந்தன் மேற்பார்வை வலமிடத்தில்லாதாகிற்
சந்தேகமில்லைசாவு சரியிதுவிதியம்மட்டே.

(இ-ள்) ராசிநாதன் கேந்திரகோணத்தில் அணியணியாக நின்றாலும் அந்த ஸ்தானாதிபதிகள் உச்ச நட்பாயிருந்தாலும் அந்த ஸ்தானாதிபதிகள் ஒருவர்க்கொருவர் பகையாய்சஷ்டாஷ்டமஸ்தானத்திலிருந்தால் ஜாதகனுடைய வாழ்நாள் குறைந்து ஆஸ்தி பூஸ்தியாகிய செல்வமெல்லாம் வீணாகக் குலைந்து அழிந்து போகும் எ-று 213

எந்தொரு வீட்டாராகி லிடவற்குண்டேயாகில்
அந்தொருவிடமுந்தீதா மதற்குகாரகருந்தீதே
தொந்திருந்தனரேயாகி னோக்காடுமதிகமுண்டு
செந்திருவரையும் பற்றுஞ் செகத்துதித்தோற்குச் சொல்லே

(இ-ள்) லக்கின ஸ்தானாதிபதிகள் மூன்றாமிடத்திலிருந்தால் கொடுமையாய் வாழ்ந்தவனாயிருந்தாலும், அந்த சுக சவுக்கிய மெல்லாங் குறைந்து கஷ்டமும் கவலையுமாய் திரிவதற்காகும் எ-று

ஒருவருக்கொருவர் கேந்திர கோணமுமணியாய்க் கூட்டம்
இருவராய்க்கூடி கேந்திர கோணமுமணியாய்க்கூட
திருகுளோராகிக் கேந்திர கோணமுமணியாய்நிற்க
வருவதுநன்மைதீமை வயணமிங்கறிந்துசொல்லே

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்) சூரியன், சனி செவ்வயாகிய கிரகங்களின் இரண்டு பக்கத்திலும் மற்ற கிரகங்களிலிருந்தால்உடனே மரணமுண்டாகும் செவ்வாய் கிரகத்திற்கு இந்தவிதமாக அடைவாயிருந்தால் அநேக விதமான சுகசம்பத்தமைந்தயோக பாக்கியமுண்டாகும் ஆனால் கிரகங்களில் பார்வையைக் கவனித்து பலனை கவனிப்பீர்கள் எ:று 215

நாலுபேர்கூடிகேந்திர கோணமுமவையாய்க்கூட
ஏலுடன் சுங்கன் கூடி லிவர்குநால் கோணமாகில்
ஆலுகந்தானுங்கூடி யிவர்குநாலைந்தேயாகச்
சேலுடனேழுபேருஞ் சேர்ந்தனரேயாகில்

(இ:ள்) அஷ்டமாதிபதி ஆறாமிடத்திலிருக்க செல்வமில்லாமல் வருமை சூழும் மற்ற கிரகங்களும் சஷ்டாஷ்டமஸ்தானத்திலிருந்தால் ஜாதனுக்கு ஆஸ்தி பூஸ்தி அழிந்து அனாதயாயிருப்பதுடன் அற்பாயுசாயிருப்பதற்காகும் எ:று 216

தனபதியுடையனானவன் றனலாபமதிகமுண்டு
மனையதிலசுவமுண்டு மகிழ்ச்சியுஞ்சிவீரையுண்டு
பொனின் பதிக்கதிபனாகிப் பொற்சிங்காதனமுமுண்டு
இனிப்பதுமுடையோனாகி யிருப்பனேவயது நூறாய்

(இ-ள்) கெடுதியாக லக்கினத்தில் பாபக்கிரகங்களிலிருக்க சுபக்கிரகங்கள் நான்கு ஆறாமிடத்திலிருந்தால் ஜாதகனுடைய தனதான்ய சம்பத்தெல்லாம் பலவிதமாய் பெருகி மேன்மேலும் விருத்தியாகி நூறு வயதுவரை ஜீவித்திருப்பான் எ-று 217

இந்தணிகோணகேந்திர கூட்டமிருப்புந்தப்பி
அந்தணன்றிகைத்து நிற்க வாகேடுமு...னேயுண்டு
நொந்துடனிருப்பநூறு வயதுடன்றனிலேலாதம்
எத்திடிற்சதியேயாக வாகன யோகமில்லை,

(இ-ள்) சந்திரனுடைய புதன் சேர்ந்தும், சனியுடனே குரு சேர்ந்திருக்கவும் லக்கினாதிபதியும் சூரியனும் சுக்கிரனும் சேர்ந்திருக்க குருவுக்கு அஷ்டமஸ்தானத்தில் செவ்வாயும் ராகும் சேர்ந்தாலும் அதிபதியான யோகமில்லாமல் வறுமையால் கலங்குவதுடன் அற்பாயுசாயிருக்கும் எ-று 218

ஒருரெண்டுமொன்றுமூன்றா யொன்றொன்னாய் நிற்கவன்றி
இருவொன்றாமுன் றொன்றாக விருக்கவுமன்றிப்பின்பு
திரியொன்றுமொன்றிரண்தூ யொன்றாக விருந்தாராகில்
நெறியுண்டகஷ்டமுண்டு நின்ற நாட்டுயரமுண்டே

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்) ஜனன லக்கினத்திற்கு கேந்திரகோணதிபர்கள் சுகஸ்தானத்திலிருந்தாலும் அல்லது ஆக்ஷி உச்சமாயிருந்தாலும் அவர்கள் சுபராயிருந்தாலும் நான்கு கிராங்கள் வக்கிரமாயிருந் தால் ஜாதகனுக்கு சதாகாலமும் சுகமில்லாமல் மாரகமுண்டாகு மென்றறிவாய் மாதே எ-று 219

ஒன்றொன்று மூன்றிரண்டு மொன்றொன்றால் நிற்கவன்றிப்
பின்னொன்று மூன்றிரண்டு பின்னிரண்டொனறாய் நிற்க
அன்றன்றின் மூன்றொன்றிரண்டு மொன்றிரண்டணிடணிகி நின்றால்
அன்றுருஞ் செல்வமல்லா லதிகவாய்ச் செல்வமில்லை

(இ-ள்) கிரகங்கள் ஒன்றாய்ச் சேர்ந்துமேன்மையாயிருந்தா லும் இலக்ஷிமிகடாக்ஷமுண்டாகும் அவ்விதமின்றி அந்த கிரகங் கள் சுபகிரகங்கள் நான்காமிடத்திலிருந்தால் ஜாததனுக்கு வறுமை மூழ்ந்து மாரகமுண்டாகும் எ-று 220

இருக்கவே நால்வர்கூடியதற் சிருபக்கமூவர்
நெருக்கமாய் நிற்க மற்றோர் நின்றிட ஒருவராகச்
சேர்க்கவுஞ் செல்வமில்லை சென்மசீதளனாய் நிற்பன்
பெருக்கவே யோகம் இல்லை பெலனுண்டாமாயுள்யோகம்

(இ-ள்) கிரகங்கள் கூட்டமாயிருந்தாலும் சந்திரன் கேந்திர கோணஸ்தானத்திலிருந்தால் சுபக்கிரகங்கள் நான்குபேர் அமி சையில் நிசமாயிர்க்க அங்கிதாதிபதி, துன்பமாய் நீசமாய் அந்த மாயிருத்தல், சதாகாமும் துன்பமும் துயரமாய்செல்வமெல்லாம் போய்விடும் எ-று 221

ஒன்றிரண்டொன்றிண்டா யோரொருவிடமாய் மற்றோர்
நின்றிடவொன்றுக்கொன்று நேரிலாதாறெட்டாகிற்
கொன்றிடுஞ் செல்வமெல்லாங்குடுயதமாகச் செய்யும்
என்றுடன் சுங்கன் சொன்ன திதுமொழிதப்பாமாதே

(இ-ள்) கிரகங்கள் அணியாய்க் கேந்திரஸ்தானத்திலிருந்த தாலும் கோணஸ்தானத்திலிருந்தாலும் அந்த கிரகங்களில் நால்வர் நிசமாயிருப்பதுடன்அந்தகிரகங்களின் அங்கிசமும் அவ் விதமேயிருந்தால் அந்த ஜாதகனுக்குத் துன்பமும் துயரமுமே விட்டு மாரகமுண்டாகும் எ-று 222

ஆறிடமதின்றாது பேருமேணியாய்னிற்க
வறுமற்றொருனின்ற விடத்துக்கோயாறெட்டாகில்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

நீறுபட்ட து போற்செல்வநில்லாமற்குடி விட்டே ாம்
வேறுபட்டுலகமெல்லாம் வெருண்டுடன் றிரிவன் றானே

(இ-ள்) நான்கு கிரகங்கள் ஒருவர்க்கொருவர் பகையா யிருக்க அவர்கள் கேந்திரகோண ஸ்தானத்தில் அணியணியாய் சேர்ந்திருந்தாலும் நன்மைசெய்பவர்போல லாபங்காண்பித்து கைப்பொருளெல்லாம் செலவாகும்படியாய்நாசஞ்செய்வார்கள் எ-று. 123

இரண்டுமொன் றிரன்டு மற்றுளோரிவர்க்கிரண்டாய்க்
கொண்டுநின்றிட முந்தீதாய்க் குறியதாய் நின்றாராகிற்
கண்டுமநேகங்குற்லங்கலங்கியே பொருளும் போகும்
அண்டியவிட முத்தப்பியவதியும் வயதுமற்பம்

(இ-ள்) கிரகங்கள் சேர்ந்து கூட்டமாயிருந்தாலும் சாத கனுக்குள் லக்ஷ்மிகடாக்ஷமுண்டாகும் அவ்விதமின்றி சுபக்கிரகங் கள் நான்காமிட ஸ்தானாதிபதிகளாயிருந்தால் யாதொரு லாப மில்லாமல் மாரகமடையும்படியாய் செய்வார்கள் எ-று. 224

கூடி நின்றிடத்துமற்றோர் குறிதப்பியாறெட்டாக
ஆடியேயாற்சியுசசாகினும் மாதே கேளாய்
தேடியசெல்லாஞ் சிதறிடுமிடமுந்தப்பி
வாடியேநிற்பன் கண்டாய் வயதுமேயற்பமாக

(இ-ள்) சந்திரன் கேந்திராதிபதியானாலும் கோணாதிபதி யானாலும் கிரகங்களின் கூட்டம் சேர்ந்திருந்தாலும் அவர்கள் சுபராயிருந்தாலும் நான்கு கிரகங்கள் அமிசையில் நீசமாயிருந் தால் அந்த சாதகனுக்குப் பலநாளுந்துன்பமும் துயரமும் நேரிட்டு தனதான்ய சம்பத்தெல்லாம் அழிந்துபோகும் எ:று 225

உண்டிரண்டொன்றுமொன்று மொன்றுமொருரெண்டிமற்றோ ரெட்டாய்க்
கண்டிடவாட்சியுச்சங் கருதிலாநலமானாலும்
அண்டியேபொருளுமுண்போ மவதியுங்கெடுதியுண்டு
கொண்போய்நிலைலைமைதப்பிக் குடுயிதுவயதுமற்பம்

(இ-ள்) கிரங்களின் கூடடமொன்றாய் சேர்ந்து கேந்திர சதானத்திலிருந்தாலும் அல்லது கோணஸ்தானத்திலிருந்தாலும் அந்த கிரகங்கள் நான்குபேர் பகை நீசமாயிருந்தாலும் அந்தஷ் தானமே அங்கிசமானாலும் சாதகனுக்கு பலவித துன்பங்மேற் படுவதுடன் அற்பாயுசென்ரே சொல்லப்படும் (எ:று). 226
பிரதியோககாண்டம் முற்றிற்று அக 9049

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

# ஆயுள் காண்டம்

## இராசி சக்கரம்

| | | | |
|---|---|---|---|
| விரய ஸ்தானம் | இலக் கினம் | தனகுடும்ப ஸ்தானம் | திர ஸ்தானம் |
| இலாப ஸ்தானம் | | | சுக ஸ்தானம் |
| ஜீவன ஸ்தானம் | | | புத்ர ஸ்தானம் |
| பாக்ய ஸ்தானம் | ஆயுள் ஸ்தானம் | களஸ்திர ஸ்தானம் | சத்துரு ஸ்தானம் |

### தீர்க்காயுள்

செல்வராய்க்கேந்திரகோணஞ் சேர்ந்துநின் றணியுமாகில்
அல்லவரரட்சியுச்ச மாகியிமாதேகேளாய்
எல்லவாநலமானா லு மெட்டாறுமாக நின்றார்
பொல்லாவராகக் செல்வம் போய்விடும் வயதுமற்பம்

(இ-ள்) இவ்விதமாக அநேகங்கோடி பொருள்களுண்டாகு மென்று சுக்கிரன் சொன்ன நீதிவாக்கியங்கள் உலகத்தினர் கிடைச்குமோ கிடையாதோவென்றாய்ஜாதகருக்கு சுக்கிரனிருக் கும் ஸ்தரனத்தை கவனித்து சொல்வாய்மாதே எ-று 1

மதிபதியதற்குக்குகேந்திர கோணணியாக நின்றிங்
கதிபதியுச்சநட்பு மாகிலுமாதேகேளாய்
பதியவர்க்கொன்றுக் கொன்று பகைத்துமாறெட்டேயாகில்
விதியதுகுறைந்துசெல்வம்வீணிலே குலைந்துபோமே

(இ-ள்) மேற்குறிப்பித்தவிதமே ஜாதகன் ஜனனமானநாழி யைக் கணக்கெடுத்து எந்த லக்கினம் உதயமாகிறதோ அந்த லக்கினத்தையே முதலாகக்கொண்டு கணிதாராய்ச்சியுடன் பனி ரெண்டு ஸ்தானமும் கண்டு அந்தஸ்தானத்தில் கிரகங்களிருக் கும் ஸ்தான பலனிறைந்து பெரியோர் சொல்லுவார் ஆனால் கிரகங்களிருக்கும் நக்ஷத்திர சாரநிலையைக் கவனித்து வேத மூர்த்தியைப்போல பலனுரைத்தால் ஜகத்திலிருப்பவர்களெல் லாம் புகழ்துரைக்கும் ஜோதியைப் போலிருப்பான் எ-று 2

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

ஒன்றிரண்டொன்றுமூன்று மொன்மாய் நிற்குற்றம்
என்றுள்ள சுகமுந்தப்பி யிருப்பிடமனையுங் குற்றம்
நனறுளளனாகிவாழ்ந்த நலங்குன்றிக்கஷ்டமாகி
நின்றுடன்றிரிவன்றானே நிலையிதுகுறிதப்பாதே

(இ-ள்) அஷ்டமஸ்தானாதிபதியும், சனியும், ஆஷிபெற்றிருக்கும்போது சுபக்கிரகங்கள் சேர்ந்திருக்கும்போது அவர்களுடனே சந்திரனுமிருக்க மற்ற கிரகங்கள் நாலாமிடத்திலிருந்தால் எவ்வளவு ஈனஸ்திதியாயிருந்தாலும் ஆயுள் விர்த்தியுண்டாகி தரித்திரங்கள் நீங்கும்படியான தனவந்தனாயிர்ப்பதற்காகும்எ-று 3

சூரியன்மந்தல்கேயைச் சூழ்ந்திர்புறத்தின்மற்றோர்
சாரியராகனுற்கச் சாவதுமுடனேயுண்டு
வீரியர்க்கிவ்வடைவேயாகில் வேண்டியயோகமுண்டு
பாரிவையறிந்து கொண்டு பார்ளேர்ர்க்குறைப்பாய் மாதே

(இ-ள்) சனியும், புதனும் சுக்கிரனும் ராசிநாதனும் லக்கினாதிபதியும் கூட்டக்கிரகங்களாய் கூடியிருக்க மற்ற கிரகங்கள் அவருக்கு நாலாமிடத்திலிருக்க விசேசமாய் தனதான்ய சம்பத்துண்டாயிருப்பதுடன் நூறுவயது வரையிலும் வெகு பாக்கிய வானாயிருப்பதற்காகும் எ-று 4

எட்டாணியாறுமாக விருந்திடிற்செல்வமில்லை
மட்டினிலெட்டாறாக மனையவர் நின்றாராகில்
விட்டிடுமாயுணில்லா வீணிலேதினமும்போகும்
தொட்டணையாமற்செல்வந்தூரவே நிற்குமாதே

(இ-ள்) அஷ்டமாதிபதியும் புதனும் சுக்கிரனும் சந்திரனும் இலக்கினாதிபதியும் சேர்ந்திருக்கும் ஸ்தானாதுபதி ஆக்ஷியாயிருக்க மற்ற கிரகங்களிலிருந்தால் ஸ்தானாதிபதிக்கு சனி இருடரத்திலெங்கிருந்தாலும் தனதான்ய சம்பத்துடன் பூர்ணாயுகாயிருப்பதற்காகும் எ-று 5

கெடுதியாயுதைய பாபர் கிட்டியே நாலாறாக
அறுதியாய்நல்லோர்நிற்கு மவரவற்காறெட்டாகிற்
பரிதியாய்ப்பட்டாற்போலப் பறந்திடுஞ் செல்வமெல்லாம்
பரிதியாயுதித்தக்காளை பெயர்ந்தெழுமெமபுரந்தே

(இ-ள்) அஷ்டமத்திற் கெட்டாமிடத்தில் மற்ற கிரகங்கள் இரண்டு பக்கத்திலும் சேர்நதிருக்குமானால் வெகுவிதமான திரவிய லாபமாயிருப்பதுடன் நூறுவயது வரையில் சுகஜீவியாய் கிருஷ்ணனைப்போல சுகஜீவியாய் வாழ்ந்திருப்பதற்காகும் எ-று

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

மதியுடன்புந்திசேர மந்தனோடரசனிற்க
விதியடனிரவிசிங்கன் வேந்தனுக்கெட்டிற்பூமன்
கதிபெறப்பாம்புகூடக் கலந்துடன் பூமனின்றால்
அதிபதியோகமில்லை யவனுக்கேவயதுயற்பம்.

(இ-ள்) சனி ஆக்ஷியாயிருக்க மற்ற கிரகங்கள் இரண்டு பக்கத்திலும் சரியாகயிருக்க சனியிருந்த ஸ்தானத்திற்கு முன் ராசியே அம்ஸாலக்கினமாயிருந்தால்இந்த ஜாதகனுக்கு வயது நூறு வரையிலும் தனதான்ய சம்பத்துடன் வாழ்ந்திருப்பதற்காகும் மாதே எ-று 7

செற்மாய்க்கேந்திர கோணத் தாருமேசுகமாய்நிற்க
அல்லவென்றாட்சியுச்ச மாகிலுமேலாய்நிற்க
நல்லவராகிலு நான்குபேர் வக்கிரமாகித்
சொல்லஞ்சுகமேயில்லை தோன்றிடுமாட்டமாதே

(இ-ள்) சனியின் ஸதானத்தில் நான்கு கிரகங்கள் சேர்ந்திருக்க சந்திரனும் அவருக்கு நாலாமிடத்திலிருக்க சனியும் அதர்க்குநான்கிலிருநதால் ஜாதகனுக்கு நூறு வயதுவரையிலும் குதிரை வாகனாதிகளும் திரவிய சம்பத்துடனும் வாழ்ந்திருப்பதற்காகும் எ-று. 8

கூட்டமிமணியுமாகிக் குறைந்துனின்றவருமேலாய்த்
தேட்டமாயிருந்திட்டாலுத் திருத்திலுண்டுகண்டாய்
ஒட்டமாய்த்திரும்பிநன்றோ ரொரிநான்குபேருமாகிற்
சேட்டயேயில்லைகேளாய் சீவனுக்சழிவுமாதே

(இ-ள்) கேது பகவானிருந்த ஸ்தானத்திற்கு ஆறு ஏழு எட்டாமிடங்களில் சுக்கிரனும், புதனும் குருவும் சுபமாயிருக்க மற்ற கிரகங்களும் எந்த ஸ்தானத்திலிருந்தாலும் ஜாதகனுக்கு வயது நூறாகுமென்றறியாய் பெண்ணே எ-று 9

அல்லவென்றணியுங்கூட்ட மதிசேந்திரகோணமாகில்.
நல்லவராகிநிற்க நான்குசேரமிசை நீசம்
சொல்லிவரங்கசாதி துன்பநீசாஸ்தமாகிற்
பொல்லதுவருமேகூடப் போய்விடுஞ் செல்வமெல்லாம்

(இ-ள்) அஷ்டமாதிபதியும் அவருக்கு எட்டாமிடத்ததிபதியும் குருவும், சுக்கிரனும், சந்திரனும், சனியும் சேர்ந்து ஒரே ஸ்தானத்திலிருந்தால் குறைவில்லாத தனதான்யசம்பத்துண்டா



CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

யிருக்கவும் நூறுவயதுவரையிலும்திரவியசம்பத்துடனும்ஆனை குதிரை பெருத்த தனவந்தனாய்ஜீவித்திருட்பதற்காகும் எ-று 10

இன்பமா யணியுங்கேந்திர மிருந்திடிற்ட்டங்கோணம்
அன்பதாய் நின்றாராகி லதிநான்கு பேரு சம்
தன்பத மாகின்றோ மதுவேயானால்
துன்பமா பாயுள்செல்வஞ் சொல்வது மற்பமாமே.

(இ-ள்) முன் குறிப்பித்த சந்திரனும் சனியும் சேர்ந்த ஜென்மம் சுகஸ்தானத்திலிருக்க அவருக்கு நாலாமிடத்தில் சுபகிரகங்கலிருந்தாலும் சனி நின்ற ஸ்தானத்திற்கு நாலமிடத்தில் குருவும் சுக்கிரனுமிருந்தால் நூறு வயது வரையிலும் செல்வந்தனாக ஜீவித்திருப்பதற்காகும் எ:று 11

அல்லவே நான்குபேரு மதிகை யாகினிற்க
நில்லுமவ் வீட்டார்தாமு நீசமுடாஸ்த மாகிற்
செல்வராய்க்கேந்திந்கோணஞ் சேர்ந்தணி யிருந்திட்டாலும்
நல்லவர் போலனின்று நாசமே புரிவாமாதே.

(இ-ள்) சனியுடனே மேற்குறிப்பித்த குருவும் சுக்கிரனும் சேர்ந்திருந்தாலும் அவருக்கைந்தாமிடத்திற் ஐந்தில் மும்மூன்று பேராய் நிற்க ஜாதகன் நூறு வயது வரையிலும் தனதான்ய சம்பத்துடன் உலகில் ஜிவித்திருப்பான் மாவே எ-று. 12

கூட்டமு மணியுமாகிக் குறைத்துனிற் வருமேலாய்த்
தேட்டமாயிருந்திட்டாலுந் திருகிலுண்டு கண்டாம்
ஓட்டமாய்த் திரும்பினன்றோரோரு நான்குபேருமாகிற்
சேட்டமேயில்லைகேளாய் சிவனுக் கழிவுமாதே,

(இ-ள்) மூன்று கிரகங்களுடனே சனி சேர்ந்திருக்க இரண்டாமிடத்திலும் லக்கினத்திலும்சுபகிரகங்களிருந்தால் ஜாதகன் நூறுவயது வரையிலும் தனதான்யம் பொருள்பூஸ்திதியுடனும் வாழ்ந்திருப்பதற்காகும் எ-று 13

அல்லவென்றணியுங்கூட்ட மதிடகேந்திர கோணமாகி
நல்லவ ராகிநிற்க நான்குபே ரமிசைநீசன்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சொல்லிவ ரங்கிசாதி துன்பதீ சாஸ்திரபாகிற்
பொல்லது வருமேகூட ப் போய்விடும் செவமெமலாம்

(இ-ள்) சனி மகரகும்பத்தில் ஆசியாய் நீசமில்லாமல் அம்ஸா ராசியில் உச்சமாயிருந்தால் தனதான்ய சம்பத்து மேலும் மேலும் பெருகி சுக ஜிவியாய் நூறு வயது வரையிலும் ஜீவித் திருப்பதற்காகும் எ-று 14

இன்பமா யணியுங்கேந்திர மிருந்திடிங் கூட்டங்
அன்பதாய் நின்றாராகி லதினான்கு பேருநீசன்
அன்பத மாகி நின்றோ ரங்கிச் மதுவேயாகில்
துன்பமா யாயுள் டுசலவஞ் சுபமது மற்பமாமே

(இ-ள்) ராகு உச்சமாக சந்திரன் ஆக்ஷியாக்க சுக்கிரனும் குருவும், மேற்குறிப்பித்த கிரகங்களும் நாலாமிடத்திலிருந்தால் சாதகனுக்கு குறையாத பெருஞ் செல்வமும் சுகபோக பாக்கியமும் பெற்று நூறுவயது வரையில் ஜீவித்திருப்பதற்காகு எறு15

இப்படியனேகங்கோடி யெண்ணோணாப் பொருள்களுண்டு
மெய்ப்பட சுங்கனிதி மேதிலி போர்க்குச்கிட்டா
தெப்படி யென்னிற்கேளாயெடுத்தோது மானுமைக்குச்
சொறபடுஞ் சுங்கன் சூட்சிச் சோதித்துச் சொல்வாய் மாதே

(இ-ள்) பவிரெண்டாமிடத்தானும் சனியும் ஆயுள் கொடுத்தாலும் மற்ற ஏழு கிரகங்களும் ஒருவருக்கொருவர் சுபராயிருந்தால் சாதகனுகக்கு விசேஷ யோகமுண்டாகி தேவர் கட்குும் மேலான யோகபாக்கியத்துடனே நூறு வருஷம் வரையிலும் சுக ஜீவியாயிருப்பதற்காகும் எ:று 16

சொல்லுவர் பெரியோராவர் தோன்றிடுமலரேதெய்வம்
அல்லொடு பகலுமாக வதினுடைச் சாரங்கண்டு
ஒல்யிமோர் வேதமூர்த்தி யுரைந்ததென் றறியலாகும்
செல்லுமே தேசமெல்லாஞ் ஜெகச்சோதியாக நிற்பன்

(இ-ள்) கிரகங்கள் ஒன்றாய் சேர்ந்திருந்தாலும் வரிசையாய் நின்றிருந்தாலும் கிரகங்கள் அம்சையாயிருந்தால் சாதகனுக்கு விசேஷ யோக பலனகளுண்டாவதுடன் சுகமாயிருப்பதற்காகும் கிரகங்கள் மறைந்திருந்தாலும் நூறு வயது வரையிலும் தனதான்ய சம்பத்துடன் சகலவந்தனாக வாழ்ந்திருப்பதற்காகும் எ-று 17

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

அஷ்டமவிடத்தான்மந்தன் னாட்சியிற்கூட நால்வர்
திட்டமாய்கூடிநின்ற திங்களுமதிலேநிற்க
நட்டமில்லாமல் மற்றோர் நாலுநாலாகி நின்றால்
பொட்டெனவயதுண்டாகிப் போய்விடுந்தரித்திரங்கள்

(இ-ள்) லக்கினாதிபதியும் சந்திரனிருந்த ராசி நாதனும் அஷ்டமாதிபதியும்ராகும் இவரிருந்த ராசிநாதனும் புதனுடனே சேர்ந்து ஆறுகிரகங்களும் ஒருவருக்கொருவர் பகையில்லாமல் சுபமாயிருந்தால் நூறு வயது வரையில் தனதான்ய சம்பத்துடனே சகசீவியாயிருப்பதாகும் எ-று 18

மந்தனுல் புநதிசுங்கன் மதிவீட்டானுதைய ததோனும்
அந்தமாயக் கூடமாறேர ரவற்குநாலைந்தேயாசில்
தொந்தமால் செல்வமுண்டு தொண்ணூறும்பத்தும்
வந்த நாள் முதலால் கொண்டு வளர்ந்துடன கண்டு
பாக்யமுண்டே

(இ-ள்) அஷ்டமஸதானத்திலிருக்கும் சனியை சுபகிரகங்கள் பகை நீசமில்லாமல் பார்த்தாலும் இவருக்கு நாலாமிடத்தில் பாபகிரகமில்லாமலிருக்கும் போது லக்கினத்திற்கு எட்டுக்கு அஷ்டமஸ்தானத்தில் சந்திரனிருந்தால் அந்த ஜாதகன் சிரஞ்சீவியாக சீவித்திருப்பதற்காகும் எ-று 19

எட்டவன் புந்திசுங்க னிந்துவுமுதையத்தானும்
மட்டினிற் கூடினிற்க் மனையவற்றாட்சியாகச்
சட்டெனமற்றோர்நின்ற சரியிருபுறமரய்ச் சேர்ந்தால்
பொட்டெனவயதுண்டாகும் புகலருஞ்செல்வமுண்டே

(இ-ள்) அஷ்டமத்திற் கஷடமஸதானத்தின் இரண்டு பக்கமும் சுபகிரகங்களிருந்தாலும் சுக்கிரனும் குருவுமிருந்தாலும் லக்கினத்தில் சந்திரனிருந்து சுக்கிரனுக்கு ஏழிலிருந்தாலும் சனிக்கு நாலில் செவ்வாயும் சூரியனுமில்லாமலுருக்கும்போது பிறந்த ஜாதகன் எமபுரத்தையடைவான் எ-று 20

எட்டினிலெட்டேமேற்றோ ரிருபுயஞ்சரியாய்ச்சேர
இட்மடுமநேகசெல்வ மெதிரில்வாயோகமுண்டு
விட்டிடாதிருக்குநூறு விண்ணவர்க்கதிகனாகிக்
கட்டுகின் வாழ்வன் கண்டாய் கருகில் வண்ணன்போல்

CC-0. OldTamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்) சனிக்கு நான்கில் சூரியனும் செவ்வாயுமில்லாத கோணாதிபதி கேந்திராதிபதி சந்திரனும், கடகமில்லாத ஆறு சதானங்களிலும் அஷ்டமதானத்திற்கு இரண்டாமிடங்களில் சுகமாயிருந்தால் சாதகன் நூறுவயது வரையிலும் சுகசீவியா இருப்பானென்று சொல்வாய் மாதே எ-று 21

மந்தனுமாட்சியாய்மற் றவரிருபுறமாய் நிற்க
முந்தவோர் மநதனார்க்கு முன்மனையமிசையாக
இந்தட வாகினின் றாலிவனுக்கேவயது நூறு
சொந்தமாய்செல்வமுண்டு தொல்புவியோர்க்குமாதே

(இ-ள்) நான்கு கேந்திரத்தின் கிரகங்களும் திரிகோணதி லிருக்க ராகு முதலானவர்க்கு ஏழாமிடத்தில் பாபகிரகங்களில் லாமலும் தனஸ தானாதிபதி அஷ்டசதானாதிபதியால் அந்த சாதன் நூறு வயது வரைபூர்ணாயுசா இருப்பதற்காகும் எ-று 22

கரியிடமதனினான்கு பேருமாய் கூடினிற்க
அரியிடமகனுங்கூட வருக்கு நான்மற்றோராக
எரியிடமகனுமாட்சிய மிசையிலிருந்தானாகிற்
பரியிடச் செல்லமுண்டு பார்தனில்வயதுநூறே

(இ-ள்) பகை நீசமில்லாத சூரியன் பார்வையில்லாமல் குரு வக்கிரமில்லாத பார்வை பெற்று சுக்கிரனுடனே சந்திரனும் லக்கினத்திலிருந்தால் அஷ்டமத்திற் கஷடமாதி பொருந்திருந் தால் சாதகனுக்கு வயது நூறுகு மென்றுணர்வீர்கள் எ-று 23

செங்கருநிலனின்ற சீர்மனைக்காறேமெட்டில்
சுங்கனும்யுந்திபொன்னுஞ் சுபமதாயிருக்சயற்றோர்
எங்கனுமிருந்தாராகி லிவனுக்கேவயது நூறு
குங்குமனையமாலே குறியிது நெறிதப்பாதே

(இ-ள்) ராசிநாதனும் லக்கினாதிபதியும்பாபக்கிரகங்களின் அங்கசத்திலிருக்க, ராசி லக்கினத்திற்கு பின்னிடத்தார்கள் சுப ராசிலும் சுக்கிரனுடனே சத்திரன் சேர்ந்து லக்கினாதிபதிக்கு நாளில் சூரியனும் செவ்வாயுமிருக்கப் பிறந்த சாதகனுக்கு சதா காலமும் சஞ்சீவிசிலைபோலிரும்பாகும் எ-று 24

எட்டுடனெட்டுவீட்டா னிருடனரசன் சுங்கன்
பொட்டெனமதியுமம்தன் புகுந்தொருவிடத்தினின்றால்
வீட்டிடாதிருக்குஞ்செல்வ மேதிலிருப்பது நூறாய்
மட்டிடாச்செல்வமுண்டும தகெசதுரகயோகம்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்) ராகுவுக்கு அஷ்டமஸ்தானத்தில் செவ்வாயும் வள
பிறைச் சந்திரனுக்கெட்டாமிடத்தில் புதனும் சனிக்கு ப
ரெண்டாமிடத்தில் சூரியனும் தாளில் குருவும் புதனுக்குதை
தாக நீசமில்லாமலிருந்தால் அந்த ஜாதகனுக்கு நூறு வய
வரையிலும் சுகமாய் சீவித்திருப்பதற்காகும் எ-று 2

சேர்ந்திருவோருங்கூடச் சென்மநா விடமேயாகப்
பூர்ந்தவர்க் கொருநாலாகப் புண்ணியரிருக்குமந்தன்
சார்ந்துனின் றிடத்துநான்குற் சருவுபொன் சுங்சனாகில்
ஏந்துபொன் செல்வனாகி யிருப்பனே வயது நூறாய்

(இ-ள்) அஷ்டமஸ்தானாதிபதியிலிருக்கும் ஸதானத்திற்
இரண்டு பக்கமும் சுபகிரகங்களிருந்தால் குறையில்லா
சனிக்கு ஏழிலாகிலும் நாலிலாகிலும் சுக்கிரனும் குருவுமிருக்
வளர்பிறைச் சந்திரன் சூரியனுக்கு ஆறாமிடத்திலிருக்
ஜாதகன் நூறுவயது வரை சீவித்திருப்பதற்காகும் எ-று 2

அற்பாயுசு

இருந்திட மந்தனோடே யிருவருங் கூடநிற்கப்
பொருந்திவர் கைந்திற்கைந்திற் போய் மூன்று பேராய் நிற்க
தரும்விதி நூறாயனின்று தனபாக்கியமுடையனாவன்
செரும்பவ ளிதழின் மாதே செப்பினன் சுங்கன்றானே

(இ-ள்) லக்கினாதிபதியும் ராசிநாதனும் நீசமில்லாமலு
சூரியன் சேர்ந்தாலும் பார்த்தாலும் அந்த ஸ்தானத்தில் தே
பிறை சந்திரனிருக்க அந்த ஸ்தானத்திற்கு நாலில் சனியு
புதனுமிருக்க ராசி லக்கினாதிபதியை குரு பார்த்தால் சனியு
சுக்கிரனும் சேர்ந்தால் உடனே மாரக முண்டாகும் எ-று 27

மூணிபே ருடனேமந்தன் முதல்வனாகி நிற்கப்
பூரணிரண் டொன்றாய்மற்றைப் புண்ணிய னின்றாராகிற்
காணுமே செல்வமிஞ்சிக் கனக்கவே வாழ்வன்மாதே
ஆணுடன் பெண்ணும் பெற்றிங்கவனூறுவயதிருப்பன்

(இ-ள்) லக்கினத்திற் கெட்டில் சனி சனியாயிருக்க சந்திர
னுக்கெட்டில் செவ்வாயிருக்க குரு இவர்கட்கு ஏழாமிடத்
லிருக்க அந்த ஸ்தானத்திற்குச் சரியாய் சூரியனிருந்தஏழாமிட
சனியிருந்தால் அந்த ஜாதகனுக்கு பலவித துன்பமும் நேரிட்
மாரகமடையச் செய்யும் எ-று 28

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

மகரகும் பத்தின்மந்தன் மழிநீச வமிசையன்றி
உயருச்சவ மிசையாகி யோங்கிபயனின்றா ராகிற்
கொமொத்தது போற்செல்வஞ் சேர்ந்துனின்றுலகில் வாழ்வன்
விபரமுற்றுடையனாகி மேதினி யிருப்பநூற்றாம்

(இ-ள்) ஜனன லக்கினத்திற்கு அஷ்டம ஸ்தானத்திற்கு எட்டில் சனி ராகு சூரியனிருக்க சந்திரனுத்தகட்டிற்கு எட்டில் குருவும் செவ்வாயுமிருக்க சுக்கிரனும் புதனும் பார்வை செலுத்தா விட்டால் குழந்தை பிறந்த எட்டாவது நாளில் மாரகமுண்டாகும் எ-று 29

நீலனு முச்சமாக னிலவது வாட்சியாகி
மேலெனு மரசன்சுங்க னிவற்குமே நாலாம்னின்றாற்
பால்பெருஞ் செல்வமுண்டு பாக்கிய வானுமாக
ஏலபெரும் யோகமுண்லிங் கிவனுக்கே வயது நூறு

(இ-ள்) சூரியனின்ற ராசிக்கு அஷ்டம ஸ்தானாதிபதியும் சனியும் சேர்ந்திருக்க லக்கினத்தில் செவ்வாயிருக்கவும் இந்த கிரகங்களை சுபகிரகங்கள் பார்க்காவிட்டால் அவர்களுடனே சந்திரனில்லாமல் ராகு சேர்ந்திருந்தால் மிகவும் அன்பாக பிறந்த ஜாதகன் அப்போது மரணமாகுமென்றுணர்வீர் எ-று30

ஆறிரண் டிடத்தான்மத்த னாயுசு கொடுத்தாலுண்டாம்
ஏறுமற் றேழுபேரு மிவற்கவர் சுபமேயாகில்
வீறுமே யோகம்பற்றி விண்ணுளோர்க் கதிகனாகிப்
பேறுவோ ரதிகனாகிமி பெரியவ னாவனூறாய்

(இ-ள்) ராகுவுக்க நான்கில் யாருமில்லாவிட்டாலும் பாபக் கிரகங்கள் நின்ற ஸ்தானத்திற்கு அந்த ஸ்தானாதிபதி அந்த வீட்டிற்கு நாலிருக்க ஜாதகன் ஜனனமாகும்போது கிரகங்களை சுபகிரகங்களை பாராமலிருந்தால் பிறந்தபோதே மாரகமுண்டாகும் எ-று 31

கூடியே யிருந்திட்டா லுங்கோணலாய்னின்றிட்டாலும்
நாடியே யணியாம்னின்று நல்லுச்சவ மிகையாகில்
ஓடியே வருமேயோக மொளித்துநின் றசைத்திட்டாலும்
தேடியே பிடிக்குஞ்செல்வந் திரும்பவேவயதுநூறாவது

(இ-ள்) ஒன்பது கிரகங்களுமிருந்த ஸ்தானாதிபதிகள் அந்த ருவக்கொருவர் நட்பில்லாமல் சத்துருவாயிருக்கஅன்றியும்அந்த

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

கிரகங்கள் ஆக்ஷி உச்சமாயிருந்தாலும் கொடுமையாகும் நற் பலனை யனுபவிக்காமல் மாரகமுண்டாகும் எ-று 32

உதித்தவன் சோமன் வீடடானோரெட்டோ றீலனாகும்
கதிந்தவனிதித்தவீட்டான் கனகவினாட ாறுபேரும்
ஒருத்தருக்கொருத்தர் துன்பமில்லையேயுறவேயாகில்
விதித்ததுவயது நூறுவயது விண்ணுளோரறியத் தானே

(இ-ள்) எந்த கிரகமாகிலும் ஆக்ஷியாயிருக்க அவருக்கு பின்னால் நான்கு கிரகங்கள் இருந்தால் அந்த கிரகங்கள் கேந்திர கோண ஸ்தானத்திலிருந்தாலும் அந்த ஜாதகனுக்கு மோசமுண்டாகுமென்று சொன்ன வாக்கியந்தவறாமல் பிறந்த சிசுஉடனே மாரகமடையும் எ-று 33

சனிக்கெட்டிற்பாபரில்லாச் சலிப்பிலார்கூடப்பார்க்க
இனிமட்டிலிவற்குநாலா யிருத்திடப்பாபரன்றி
செனித்திட்டதெட்டுக்கெட்டிற் சிதளனின்றானாகில்
செனித்திட்டுவருமோர் பாலன் சிரஞ்சீவியாகனிற்கும்

(இ-ள்) அஷ்டமஸ்தானத்தில் சந்திரனும் ஏழில் புதனும் சூரியனுக்கு எட்டில் ராகும் சுக்கிரனுக்கெட்டில் செவ்வாயும் ஆக்ஷி உச்சமாயிருந்தால் சுபகிரகமாகாது மரணமே சம்பவிக்கும் எ-று

எட்டுனெட்டினிற்க விருபக்கஞ்சுங்கன்ராசன்
விட்டிடனிதயஞ் சோமன் வெள்ளிக்கேழாகினிற்க
மட்டுடன்சனிக்கு நாலின் மண்மகனிரவியன்றி
கட்டுடனுதித்தகாளை கண்டிடாதெமபுரத்தே

(இ-ள்) லக்கினத்தில் இரண்டு பக்கமும் பாபக்கிரகங்களிருக்க ஜனன லக்கினத்திலும் பாபகிரகமிருக்க ஜென்மாதியனுப் பாபயாயிருந்தால் அவர்கள் ஆக்ஷி உச்சமாயிருந்தாலும் கொடுமையும் மாரகமுஞ் செய்வார்கள் எ-று 35

வீறுமோர்சனிக்குநான்கில் வெண்கதிர்பூமனில்லார்
மாறு முக்கோணகேந்திா மதியுமேமகடமின்றி
ஆறுமிக்கறிரண்டோ னவனசுகமானானமாதே
நூறுமட்குடிப்பனென்று நூவலுவர் நூல்வல்லோரே

(இ-ள்) லக்கினாதிபதி பலவீனமாயிருக்க சூரியன் எட்டாமிடத்திலிருக்க சந்திரனின்ற ராசுநாதன் அஸ்தமிக்க இவருக்கு

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

ஏழில் செவ்வாயிருக்க லக்கினாதிபதி பகை கிரகங்களுடனே சேர்ந்திருக்க சனியும் சப்தமஸ்தானத்திலிருந்தால்மாரகஞ் செய்வார் எ:று 36

நாலுகேந்திரத்துமன்னர் நலமாய்முக்கோண்ஞ்சேர
ஏலிகந்திருக்கு நீலனிவர்க்கேழிற் றியோர்னில்லா
மேலுகந்தனத்தோன் மீறி மேருவிலெட்டோனானால்
ஆலுகந்தமர்ந்தமாதே யவனூறு வயதுள்ளோனாம்.

(இ-ள்) செவ்வாய் கேந்திரகோணத்திலிருக்க பஞ்சமாதிபதியும் சனியும் இராகும் அவர்க்கு நாலாமிடத்தில் சூரியனுமிருக்க சுப கிரகங்கள் பார்வையில்லாமலிருந்தால் சாதகன் பிறந்த போதே மரணமாகுமென்றறிவர் எ-று 37

கதிக்கொருவீனமில்லாக் கனலவன் பார்வையின்றி
மறுத்தொருவக்கிரமின்றி மன்னவன் பார்வையாகிக்
குறித்திருவுடனே சோமன் கூடவேயுதையனிற்கப்
பறித்தவர்கெட்டுக்கொட்டோன் பருநலமானாறூரறே.

(இ-ள்) சூரியன் அஷ்டமஸ்தானத்திலிருக்க விரயதானத்தில் சனியிருக்க சாத்தி ராசியில் செவ்வாயிருக்க சுபகிரகங்கள் பார்வையில்லாமலிருந்தால் சனன குழந்தைஉடனே மரணமாகமென்றுணர்வீர் எ:று 38

பதிமதிவியுநல்ல பாபரங்கிசமேயாக
விதிமதியின்னிடத்தாரிவரு மசுபரேசேர
விதிமதிபதிக்கேநாவில் வெய்யவன் பூமனிற்கிற்
சதிபதிமாதேகேளாய் சஞ்சீவிச்சிலைபோலாமே.

(இ-ள்) சப்தஸ்தானத்தில் சனி இருக்கலக்கினத்தில் சூரியவிருக்க தேய்பிறை சந்திரன் குருவுடனேசேர்ந்திருக்கசெவ்வாய் ராகுடனே சேர்ந்திருக்க சுபகிர கங்கள்இடபுற வலபுறமாகிலும் பார்வை செலுத்தாமலிருந்தால் ஜாதகன் பிறந்தபோதே மரணமுண்டாகும் எ-று. 39

நீவனுக்கெட்டித்பூமனிமதிக்கெட்டிற்புந்தி
சாலற்கிராறிற்றியுங் காமனுக்கொருநால்வேந்தன்
நூலனுக்குதையமாக நோயிலாதிருந்தாராகிற்
பாலனுத் கொருநூறாகும் படருமேயாபுரியோகம்

(இ-ள்) செவ்வாய் லக்கினததிலும், ராகுக்குவிரயஸ்தானத்தில் சனியிருக்கசூரியன் அஸீடமஷ்தானத்திலும் ஏழாயிடத்தில்



CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

வாயுமிருக்க சுபகிரகங்களிருக்கும்ஸ்தானாதிபதிகள் நீசமாயிருக்கும்போது பிறந்த குழந்தையின் ஜீவன் உடனே பிரிந்துபோகும் எ-று 40

எட்டவனிருப்பிடத்துக் கிருபக்கஞ் சுபரே நிற்க
மட்டில்லாச் சனிக்கேழ் நாலின் மன்னவன் வெள்ளிநிற்க
விட்டிடாப் பிறையுயர்ந்து வெய்யவற்காறிலாகி
இட்டமாயிருக்கிற்காளை யிருப்பனே வயது நூறாறாய்

(இ-ள்) ஜாதகள் ஜெனனமாகும்போது இலக்கினத்தில் சந்திரனும் சனியுமிருக்க இலக்கினாபதிக்கு பகையாய் சுபகிரகங்கள் பார்வையில்லாமல் அஷ்டமாதிபதிக்கு பகையாய்சுபகிரகங்கள் பார்வையில்லாமல் அஷ்டமாதிபதி அஸ்தமமானால் அச்சமயம் ஜனனமாகும் குழந்தைக்கு பலவிதமான ரோகமுண்டாகி மாரகமுண்டாகும் எ-று

அற்பாயுள்

விதிபதி நீசமின்றி வெய்யவம் கூடம் பார்க்க
அதின் மதிக்குன்றிநிற்க வதற் நால்சனியேபுந்தி
மதியதின் குரு நோக்கில் லாமந்தனும் வெளளிகூடிற்
சதிபதிமாதேகேளாய் சாவதிங்குடனேயுண்டு

(இ-ள்) நேய்பிறையில்சனியுடனே சுபகிரங்கங்கள்பார்வையில்லாமல் இலக்கினாதிபதி சூரியனுடன் சேர்ந்திருக்க ராசிநாதனுடனே செவ்வாய்சேர்ந்து குருவும் புதனும்அஷ்டமஸ்தானாதிபதியும் சேர்ந்திருக்க சனி பலவீனமாயிருந்தால் ஜனனமாகும் குழந்தை பிராணனோடிருக்காது எ-று 42

உதையத்துக்கெட்டின் மந்தனொருவனாய நிற்கத்தானும்
மதியத்துக்கெட்டிற்பூமன் மன்னவரிவர்க்கேழாக
அலையொத்து விரவினின்றாங் கதற்கேழ்நாள் மந்தனாகில்
விதியற்றுனில்லாதாகி வினையுமே திம்பாய்மாதே

(இ-ள்) பத்தாமிடத்ததிபதியும் சூரிய சந்திரனிருக்கும் ஸ்தானாதிபதிகளாகிய கிரகங்கள் அஸ்தமயமாயிருக்க இலக்கினாதிபதி சந்திரனும் சனியுடனேமோர்ந்திருக்கஇராகும்செவ்வாயும் அவர்கட்கெட்டாமிடத்திதிலிருக்க சுப கிரகங்கள் பார்வை செலுத்தினாலும் குழந்தை பலவித துயரடைந்து அம்பலமாகும் எ:று 43

உதித்தெட்டுக் கெட்டின்மைந்த னுரகனுதரவினிற்க
மதித்தெட்டுக்கெட்டினல்ல மன்னவர் பூனபசேரக்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

கதிந்திட் றிசுங்கன் புந்தி காணவுயில்லாதாகில்
விதித்தெட்டு நானிமில்லா விளையுமே தீம்பாய்மாதே

(இ-ள்) உத்தம கிரகங்கள் இலக்கினத்திலிருக்க குருவும் சந்திரனும் சஷ்டாஷ்டமஸ்தானத்திலிருக்க இலக்கினாதிபதியும் விரயஸ்தானாதிபதியும் அஷ்டமத்திலிருக்கும் பிறந்த குழந்தை மரணமுண்டாகும் எ-று 44

அருக்கனுக்கெட்டோன்மந்த னமர்ந்திதுவுதையம்பூமன்
இருக்கவுமிவரை நல்லோ ரின்பமாய்ப்பா றாராகிற்
பருக்கவேசோமனின்றிப் பாம்புடனின்றாராகில்
உருக்கமாதித்தகாளை யொருநாளுநில்லாமாதே

(இ-ள்) சுபகுரகங்கள்மத்தியில் நான்குபாபகிரகங்களிருக்க லக்கினாதிபதியும் சந்திரனும் அசுமாய் பாபருடன் சேர்நது அஷ்டம்கத்திலிருக்க ஜெனன குழந்தை அன்றையஇரவிற்றானே மரணமாகும் எ-று.

நீலனார்தனக்குநான்கி னின்றிடவராற்றானும்
கோலமாய்த்தியர் நின்ற குடிமனையதற்குநான்காய்ப்
பாலாராய்ப்பிறக்கினல்லோர் பார்க்கவேகூடாராகில்
ஏலவார்குழலாய்கேளா யினியொருநாளுநில்லா

(இ-ள்) சந்திரனுடனே அஷ்டமஸ்தானத்தியும் பாபக்கிரகங்களும் லக்கினத்திலிருக்க ராசிநாதனும் பாபருப் சேர்ந்து சந்திரனுக்கு அஷ்டத்திலிருக்க குரு பார்வை செலுத்தாமலிருந்தால் சனனமான குழந்தை மரணமாகும் எ-று 46

ஒன்பது பேருநின்ற நிலையதிலொருமையில்லாத்
துன்பமாமயட்டுக்கெட்டாய்த் தோன்றியே நின்றாகில்
இன்பமாயாட்சியுச்ச மிருக்கிலுந்தீமையாகும்
நன்பலன் கொடுப்பதில்லை நட்டமாமுதித்தகாளை

(இ-ள்) எட்டாமிடத்தானும் அவனுக்கு அஷடமஸ்தானாதிபதியும் சேர்ந்திருக்க அவர்களுக்கு இரண்டு பக்கத்திலும் பாபகிரகங்களிலிருக்க எட்டுக் கெட்டாமிடத்தில் ராகு பலத்திருக்க அவர்களை குரு பரசக்காவிட்டால் ஜாதகன் உடனே ஐந்து நாழிகையில் மரணமாகும் எ-று 47

ஆட்சியாயிருப்பிடத்துக் கவர்பின் நால்வர் நிற்கச்
சாட்சியாய்கேந்திர கோணஞ்சரியவர்நின்றிட்டாலும்

CC-0.TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

மொட்சமுன்டென்றுதானே மொழிகின்றயாறுதப்சாச்
சாட்சியாய்ப்போமேகாளை தனக்கிருப்பில்லை மாதே

(இ-ள்) அஷ்டமாதிபதியும் பனிரெண்டாமிடத்ததிபதியும் இருந்த ஸ்தானததிற்கு ஆறாமிடம் எட்டாமிடத்திற் சேராமல் அவருடன் ராசிநாதனும் லக்கினாதிபதியுஞ்சேர்ந்திருக்க சுக்கிரனும் குருவும் சேர்ந்து சூரியனுக்காகிலும் அஷ்டம விரயஸ்தானங்களில்லாமலிருந்தால் அன்றைய தினத்தில்இரவிற்றாளே குழந்தை மரணமாகும் எ-று 48

பெரியநூற்கெட்டின்மந்தன் பெரியசோமற்கேழ்புந்தி
அறியவற்கெட்டிற்பாம்பு மரும்வெள்ளிக்கெட்டிற்பூமன்
நெறியதாயாட்சியுச்ச நிற்கினுஞ்சுகமேயில்லைச்
சரியதாமிடமானாலுஞ் சாவதுநிஜமே கண்டாய்

(இ-ள்) லக்கினத்தில் சூரியனிருக்க பத்தாமிடத்திலும் இரண்டாமிடத்திலும் சனியும், செவ்வாயுமிருக்க சந்திரனும் ராகும் அந்த கிரகங்களுக்கு அஷ்டாஷ்டமஸதானத்திலிருக்க பாம்புகளால் பகைவனாகிய சூரியனுக்கு ஆறாமிடத்தில் குரு நின்ற தேய்பிறை சந்திரனும் அஷ்டமஸ்தபனாதி அஸ்தமயமாயிருந்தால் ஜனனமான குழந்தை மரணமாகும் எ-று 49

பறித்தவிலக்கினத்துக் கிருபக்கப் பாபர்நிற்க
மறுத்துநின்றுடிற்பலத்தின் மனையினிற்பாயியாகச்
செறுத்தவர்க்கேழிற்பாபி சென்மதிபாபியாகிற்
குறித்தவராட்சியுச்ச மாகுலுங்கொடுபோங்காலன்

(இ-ள்) லக்கினாதியும் பாபக்கிரகங்களும் சந்திரனும் ராகும் புதனும் சனிநின்ற ஸ்தானத்திற்கு ஆறாமிடத்திலிருக்க குரு இவர்கட்கு சாஷ்டாஷ்ம்ஸ்தானத்திலிருந்தால்லக்கினாதிபதியும் ராசிநாதனும் பகையாயிருக்க குரு இவர்களை பார்த்திருந்தாலும் கர்ப்பசிசு உடனே மரணமாகிவிடும் எ-று 50

விதித்தவனீனமாக வெண்சுதிரேழினிற்க
மதத்தவனஸ்தமிக்க மங்களநிவர்க்கேழாகப்
பதித்தவர்களையேசேரம் பாஸகரன்மகனேழாகில்
எதிர்த்தவர் நின்றாகிலேந்திழைமாதேகொல்வர்

(இ-ள்) லக்கினாதிபதியுஞ்சந்திரநிருந்தராசிநாதனும் சூரியனுடனே சேர்ந்து குருவுக்கு அஷதிஸிதானாதிபதியும் சந்திர

CC-0.TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

னுக்கு அஷ்டமாதிபதியும் சனியும் பார்வைசெலுத்தவும்புதனும் ராகும் சனியும் நான்குக்கு நாலாயிருந்தாலும் குரு சுக்கிரனுக்கு ஏழாமிடத்திலிருந்தாலும் ஜனனமான சிசு மரணமடையும் 51

தஞ்சமாய் கேந்திரகோணந் தரைமகனொருவனிற்க
அஞ்சு நான் முடவன்பாம்பு மவர்க்கு நான்கிரவியாக
மிஞ்சியே சுபருஞ் சேர்ந்து வலமிடப்பார்வையின்றி
நஞ்சுடனுதிர்த்தகாளை நாசமன்றிரவுதன்னில்

(இ-ள்) சுபகிரங்களில் ஒருவராயினும் லக்கினத்தைப்பாராமலிருக்க அந்த ஸ்தானத்தில் சந்திரனும் பாபக்கிரகமுமிருக்க சப்தமஸ்தானம் நான்காமிடத்திலும் சூரியன் சனியுமிருக்க பத்தாமிடத்தில் ராகு சுக்கிரனும் குருவிருந்தாலும் ஜனனமான குழந்தை மரணமாகும் எ-று 52

வீசுங்கதிரோனெட்டிருக்க விரையமரவுஞ் சனியிருக்க
தசத்திரேமிடமாகச் செவ்வாயொருவன் கதிந்திருக்கப்
பேசும் பெரியோர் நோக்கின்றிப் பெருமைதவிர்த்து
பேதையைப்போல்
நாசக்குழவியன்றிரவு னடக்கும் வழிதானெமபுரத்தே

(இ-ள்) சுக்கிரன் நீசமாயிருக்க பனிரெண்டாமிடத்தில் சூரியனும் ராகுயிருக்க சனி தனியாக சந்திரனுக்கு அஷ்டஸ்தானத்திலிருக்க இவர்களுக்கு நாலாமிடத்தில் செவ்வாயிருந்தால் ஜனனமான குழந்தை மரணமாகும் எ:று 53

ஏழோரிடத்திற் சனியிருக்க வெதிரானிடத்திலிரவியனு
தாழ்வாம்பிறையந் தன்னிடத்திற் றரணிசுதன்பாம்புடன்கூட
வாழாநின்ற பெரியோரும் வலமிடத்திரகிலுநோக்கிமின்றி
விழாததன் முன்னே நடந்து வீயுங்குழவியன்றிரவே

(இ-ள்) வளர்பிறைச் சநதிரனிருந்த ஸ்தானத்திற்கு ஐந்தாமிடத்தில் சூரியயிருக்க லக்கினாதிபதி ஒன்பதாமிடத்திலிருக்க செவ்வாய் சந்திரனிருக்க குரு விரயஸ்தானத்திலிருக்க ராகு ஏழாமிடத்லிருந்தால் மரணமாவான் எ-று 54

நிழமகனுதையம்பாம்பு நின்றிடவிரையமந்தன்
பிலனுடனிரவியெட்டிற் பின்னேழிற் செவ்வாய் நிற்க
நலங்கொடு நல்லோற் நிற்க நகருவோர் சீனமாகிற்
குறிகொண்டு கண்டபோது குறிகிடுங்குழவிசீவன்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்) ஜனன லக்கினத்திற்கு கோண கேந்திரஸ்தானாதிபர்கள் சஷ்டாஷ்டமஸ்தானத்திலிருந்தால் சஷ்டாஷ்டமஸ்தானாதிபதிகள் கேந்திரகோணத்திலிருந்தால் சந்திரனுடனே நீசா பலவீனமாயிருந்தால் ஜனனமான சிசுவுக்கு ஜீவனில்லாமல் பிரிந்து போகும் எ-று

## அயுள் காண்டம் முற்றிற்று ஆக 689
## பிரதி அரிஷ்ட காண்டம்

| | | | |
|---|---|---|---|
| மீனம் 4¼ | மேஷம் 4¼ | ரிஷபம் 4¼ | மிதுனம் 5¼ |
| கும்பம் 4¼ | பனிரெண்டு இராசிகட்கும் ൦0 நாழிகை ஆகும் | | கடகம் 5¼ |
| மகரம் 5½ | | | சிங்கம் 5¼ |
| தனுசு 5¼ | விருச்சி 5¼ | துலாம் 5 | சன்னி 5 |

பிறக்கும்பொழுதே யுதையவதிற்பிலனே டரலவமுதமே
சிறக்குமதியோடிருமந்தன் சென்மதிக்கோர்பகையாகி
நிற்க்குநல்லோர் நோக்கின்றி நிலையத்தெட்டோனஸ் தகிக்கிற்
பறக்குங்குழவியிரவு நில்லப்பத்தா தணையும் பலரோக

(இ-ள்) அஷடமாதிபதியும்எட்டுக்குளட்டாமிடத்ததிபதியும் பாபக்கிரகங்களாயிருந்தாலும் சந்திரனும் சூரியனும் சனியும் அவருக்கு ஏழாமிடத்திலிருக்க குருவும் சுக்குரனும் இவர்கட்கு நாலாமிடத்திலிருந்தாலும் ஜனனமான ஜாதகன் மரணமாகும் எ-று 1

பிறைதேய்ந்தெட்டிகரியினுடன் பெலநோக்கின்றி யுதையாதி
சிறையுந்திரவியுடன்கூடி செவ்வயேமதியிடத்தனுடனே
இறையூந்தெட்டோ னரவமுடனாரெட்டாக நிற்கிலுமே
குறைசேர்ந்திருக்கக் கொடுங்கூற்றன் குறுகுங்குழவியிரவு
நில்லா

CC-0.TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்) அஷ மாதிபதிக்கு ஆறாம் வீட்டில் சனியிருக்க நான்காமிடத்தில் செவ்வாயிருக்க இவர்க்கு நான்கில் குரு சூரியன் சந்திரனும் சேர்ந்திருந்தால் ஜனனமான குழந்தை ஒரே தினத்தில் மரணமாகும். 2

பத்தாவுதையத்ததயும் பருமதியிடத்தானஸ்தமிக்கப்
பெத்தார்மதியுயரசனியுடனே பேரோடாவஞ் செவ்வாயும்
இத்தோடரவக்கெட்டாகிப் புண்ணியவரிவரை நோக்கி
நின்றேல்
அத்தாடியத்துக்கது மூன்னே யம்பலமாகுங்குழருயுமே

(இ-ள்) ராகு நின்ற ஸ்தானத்திறகு நாலாமிடத்தில் சனியிரிக்க இவர்களுக்கு பத்தாமிடத்தில் சூரியனும் சுக்கிரனும் புதனுமிருக்கு அவர்களிருக்கும் ஸ்தானத்திற்கு ஏழாமிடத்தில் சந்திரனுப்செவ்வாயுமிருட்தாற் ஜனனமானகுழந்தைக்கு கொடுமையான மாரகமுண்டாகும் எ-று 3

குதிகொண்ட நல்லோர்நிற்க குருமதியாறெட்டாக
மதிகொண்டு பாபர்வீறி மனைக்கு றான் காசு நிற்க
விதிகொண்ட விடத்தானு வீறிவிரைய முன்னவனுமெட்டிற்
பதிகொண்டு நின்றாராகிற் பறந்திடுங்குழவி சீவன்

(இ-ள்) சந்திரனுக் காறாமிடத்தில் சனியிருக்கர்ணாதிபதியாய் செவ்வாயிருக்க லக்கினத்திற்கு ஆறாமிடத்தில் சூரியனும் புதனும் சேர்ந்திருந்தால் ஜனனமான குழந்தை ஆறு மாதத்தில் மரணமாகும் எ-று. 4

நல்லவர்பாபர் நடுவதினற்கமற்றோர்
சொல்லுதையாதிசோமன் சுகமின்றிப்பாபர்கிட்டி
நில்லதிலிதையயெட்டோ னிலையவகனட் நின்றால்
வில்லமுத்ததிமாதே வியுமன்றிரவுதண்ணில்

(இ-ள்) லக்கினற்றில் சனியிருக்க வீரியஸ்தானமாகி மூன்றாமிடத்தில் சூரியன் 'குமாரனாகிய சனியிருக்க, ஐந்தாமிடத்தில் ராகும் சந்திரநிற்க லக்கினத்திற்கு பனிரெண்டாமிடத்தில் சுக்கிரனும் குருவும் புதனுமிருக்கு ஜனனமான ஜாதகன் மரணமாகும் பெண்ணே எ-று 5

பறநிலைமதினெட்டோன் பாபருமுகையநிற்கக்
குறிமதியிடத்தான்பாபர் கூடியேமதிக்கெட்டாக
அறிவுநூல் வேதமூர்த்தி யவருயேபாராரர்கில்
மூறிபடுங்குழவிசீவன் முவைந்துநாழிதன்நில்

(இ-ள்) சந்திரன் இருந்தஸ்தானத்தில் சனியிருக்க, சந்திரனுக்கு வலபுரமாக ராகு குரு சுக்கிரன் இருக்க செவ்வாய் இரணடில் புதன இருக்கும்போது ஜனனமானஜாதகனுக்கு மரணமுண்டாகும் எ-று. 6

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

எட்டுடனெட்டோன் கூடி யிருபுரம் பாபியாகக்
கட்டுடனெடடுக்கெட்டிற் கரியரான் மிகைததிநிற்க
மட்டுடன் வேதநூலான் மனையவர்பாராராகில்
விட்டுடன்போமேசீலன் வில்மைந்து நாழிதன்னில்

(இ-ள்) அஷ்மாதிபதி இருந்த ஸ்தானத்தில் சூரியனும் ராகுமிருக்க அவர்கட்கு ஏழாமிடத்தில்செவ்வாயிருக்கசனிசந்தி ரனிவர்க்கு ஆறாமிடத்தில் சுபக்கிரகங்கள் நீசமாயிருந்தால் ஜனனமான குழந்தை மரணமாகும் எ-று 7

ஈராறெட்டோர்சேந்திரமதிலிருநத மனையாராறெட்டிற்
சேராதவருடன் மதிபதிபுஞ் சென்மத்துடனுஞ் சேர்ந்திருக்க
காராதுடன் வெள்ளிமந்திரியுங் கலந்தேழிரவிக்காகினுமே
ஈராறெட்டுநில்லாதிங் கிரவேகுழவியிறந்திடுமே

(இ-ள்) லக்கினத்திற்கு அஷ்டமாதிபதி நீச்சம் பெற்றும் ஜெனனலக்கிணாதிபதியோடு குறள் சகிதம்பெற சந்திரநின்ற ராசிக்கு ஏழாமிராசியில் சூரியனும் சனியும் இரண்டிற் சுக்கிரன் புதனும் இருப்பாரேயானால் அக்குவியுடன் இறந்துபோ மென்றே கூறுவாயாக எ-று. 8

இரவிநின்றிடச் முதையமதாயீரைந்திரண்டிடக்கரி 'சேயாய்ப்
பரவிநின்றிடச்சந்திரனும் பாம்புவர்க்காறெட்டாகில்
அரவுபகையானவர்க்காறி லந்தணர்நிற்சவுமதிக்கெட்டாய்க்
குறையுடனேட்டோனஸ்தமிக்கிற் குழந்தையேகு மெமபுரமே

(இ-ள்) அஷ்டமஸ்தானாதிபதி நீசமாயிருக்க அவர்க்குபின் னாலிருக்ககுங்கிரகள் அஸ்தமயமாயிருக்க லக்கினாதிபதிக்கு வலது பக்கத்தில் செவ்வாய் சேர்ந்திருக்க சனியும் ராகும் சந்தி ரனுக்கேழாமிடத்திலிருக்க இரண்டாமிடமாகிய தனஸ்தானத் திற் சுக்கிரனும் புதனுமிருந்தால் ஜனனமான குழந்தை மரண மாகும் எ-று. 9

விதியுடனிரண்டொருபர்பருமே விடமதியரவமுங்கரி யுடனே
மதியுடன் புத்தியுங்சுரிக்காறாய்மன்னவனிவர்க்வாறெட்டாகில்
அதியுதை மதியவர் பகையாகவந்தணரி வரைநோக்கின்றேற்
கதிகுய்யத்துடன் கருமாண்டு கழன்றுவிடுமேகா சினியில்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்) குருவுக்கு எட்டாமிடத்தில் சனியும், சந்திரனுக்கும் குருவுக்கும் ஆறாமிடத்தில் ராகும், செவ்வாய்க்கு பின்னாலிருப்பவர் அஸ்தமயனமிருக்க அவருடனே புதன் நீசமாயிக்க கப்பசிசு மரணமாகுமென்றுரைப்பாய் பெண்ணே எ:று 10

சுந்தரனிடத் தானுதைபதியுஞ் சூரியனுடனே கூடவுமே
மந்திரியெட்டோன் மதிக்கெட்டோன் மந்தனுகாரலும் பாக்கிலுமே
புந்தியும் பாம்புங்கரி நாலாய்ப் பொன் வெள்ளிக் கேழினு மாகினுமே
இந்திரபய் யோடானானு மிறந்திடுமெம்புர வழியதுவே.

(இ-ள்) சூரியனும் லக்கினத்திற்கு எட்டாமிடத்தானும் ஜனன லக்கினத்திலிருக்க அவர்களுடன் சனியும் செவ்வாயும் இருக்க அவர்களுக்கு எதிரெதிராகச் சுபகிரகங்களில்லாமற் போனால் ஜனனமான குழந்தை அன்றையதினமே மரணமாகும் எ:று 11

உத்தமரொருவர் நோக்கின்றியுதையத்திடமதிற் பாபமே
சத்தமயிடமது நான் கினுமே சரிவரவாரலுமந்தனுமாய்ப்
பத்தினும் பாம்பிராவெள்ளி பாலால் பொன்னனாய்நிற்கிலுமே
செத்திட்டன்றே குழவியுமே சேர்ந்திடுமெ மபுரவழியிதுவே.

(இ-ள்) சூரியனுக்கு அஷ்டமாதிபதி ஏழில் சனியுடன்சேர்ந்திருக்க லக்கினாதிபதி தலைமையாய் அஸ்தமமாயிருக்க சந்திரனுக்கு அஷ்டமாதிபதியின் பின்னால் சந்திரனுக்கு சேர்ந்திருந்தால் ஜனனமான குழந்தை அன்றைய இரவிற்றானே மரணமாகும் எ-று 12

ஈனமாயிருக் கச்சந்திர னீரா றிலிரவிபாம்பும்
தானுமோர் மதிக்கோர் நெட்டிற் சனியுமே யொருவனாக
சினமேயிவர்க்கு நான்கிற் செவ்வாயு நின்றாகில்
தேன்மொழி மாதேகேளாய் செத்திடுங் குழவியள்றே.

(இ-ள்) புதனும் சுக்கிரனும், கன்னியுலிர்க்க சனியும், நாலாமிடத்தில் சனியிர்க்க, பாப கிரகம் இரண்டாமிடத்திலிருக்க சூரியன் பனிரெண்டாமிடத்திலிருக்க செவ்வாய் பத்தாமிடத்திலும் ஆறாமிடத்திற்குருஇருந்தால்ஜனனமானகுழந்தை சந்தேகமில்லாமல் உடனே மரணமாகும் எ-று 13

பருமதி நின்றிடத்துப் பகலவனைந் தேயாகத்
தரும் விதியொன்பதாகித் தரைமகன் பதியோடாகத்



CC-0.TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

குருபதி விரையமாகிக் கொடும்பாம்பு மேழி நின்றால்
வருவது தீம்புண்டக்கிக் குழவியுமன்றே மாளும்

(இ-ள்) ஜனன லக்கினத்தில் சனியும் இராகும் சேர்ந்திருக்க குரு ஏழாம் இடத்திலிர்க்க இவர்கட்கு நாலில் செவ்வாயிருக்க சூரியன் கணியயிர்க்கும்போது ஏழாமிடத்தில்சந்திரன் இருந்தால் ஜனனமான குழந்தை இரண்டுமாதத்தில் மரணமாகும் எ:று. 14

நன்றியே கோணமேந்திர நகருளோ ராறெட்டாக
நின்றிட வீராரெட்டோர் நிற்கவே கேந்திர கோணம்
அன்றிய மதியோடீன ராயினான் மாதேகேளாய் சென்றிடச்
சென்றிடச் செய்வதெல்லா நின்றிடதிர்க்குஞ் சிவன்.

(இ-ள்) புதன் சனி சூரியன் ஏழாமிடத்திலிர்க்க புதனுக்கு கழில் ராகு சந்திரநிர்க்க குருவுக்கு ஏழில்சுக்கிரனும், செவ்வாயு மிருக்க ஜனனமான குழந்தை மரணமாகும் எ-று. 15

எட்டுடனெட்டுவீட்டி விருந்தவன் பாபராகில்
மட்டுடன் சோமன்காரி மகிழ்ந்துனவர்க்கே யேழிற்
பொட்டென விரவி நிற்கப் பொன் சுங்கனிவர்க்கே நான்
கட்டுட னிருந்தாராகிற் கடினமாய் மரணமாமே

(இ-ள்) ஜன்ன லக்கினத்திலாயினும் பனிரெண்டாமிடத்தி லாயினும் ஆறாமிடத்திலாயினும் சனியிர்க்கசந்திரன் ஏமிடத்தில் செவ்வாயுடனே சேர்ந்திருந்தால் ஜனனமான குழந்தை மரணமாகும் எ-று 16

எட்டவர்க் காறுவீட்டி விருந்தவன் சனியேயாகிப்
பெட்டென நான்கிற் செவ்வாய் பிரியமாய் நிற்கத்தானும்
மட்டற விவர்க்கே நான்கின் மன்னவ னிரவிதிங்கள்
ஒட்டுற வாகநின்றா லொருநாளின் மரணம்பிள்ளை

(இ-ள்) சனிக்கு இரண்டுபக்கதிலும் சூரியனும், செவ்வாயும் சேர்ந்து நிற்க எட்டாமிடத்தில் இராசியிருக்கசுபகிரகங்கள் சூரியனுக்கு பின்னிடத்திலிர்க்க சனி லக்கினத்திற்கு அதிபதி நீச்சமாயிர்க்க அவருடனே சேர்ந்திருந்தால் ஜனனமான குழந்தை அப்போதே மரணமாகும் எ-று. 17

பாம்புணின் றதற்கு நான் திற்பத்தியேசணிநிற்கத்
தேம்புட ணிவற்குப்பத்தில் வெய்யவன் சுங்கன் புத்தி

CC-0.TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

ஆமிட மதற்கேயேழி லம்புலிசெவ்வாய் நின்றாற்
காம்பிள முலையினாளே கடினமாய்ச் சாவுமுண்டே

(இ-ள்) கஷ்டாகூஷிடமாஸ்தானாதிபதியுடன்சேர்ந்த சந்திரன் குரு சுக்கிரன், வேறுபட்டு அஸீடமஸ் ஆறாமிடங்களிலிருப்பது டன் ஒருவரையொருவர் சேராமலிருந்தால் ஜனனமான குழந்தை உடனே மரணமாகும் எ-று 18

மதிக்காறின் மந்தனிற்க மருவிடையிதற்கேயேழில்
அதிர்க்கோண மாகச்செவ்வா யமர்ந்துடனிருந்தானர்கிற்
பதிக்காறி லிரவிபுந்தி பாங்குடன் சேர்ந்தேநிற்க
விதிக்காறு மாதந்தன்னில் விளையுமே மரணமாக

(இ-ள்) சூரியனும், சுக்கிரனும் செவ்வாயும் சேர்ந்துலக்கி னத்திலிருக்க சந்திரன் நீசமாயிருக்க ராகு லக்கினாதிபதியும் அஷ்டமஸ்தானத்திலிருந்தால் ஜனனமான குழந்தை உடனே மரணமாகும் எ-று 19

விதியதிர் சனியேனிற்க வீரிமுன் னிரவியின்சேய்
அதியதிற் கைந்திற்பாம்பு மவருடன் மதியுநிற்கப்
பதியதற் கிறாராகப் பருசுங்க னரசன்புந்தி
சதிரத மாகி நின்றாற் சாவதுமெய்தான்மாதே

(இ-ள்) பகை கிரகங்கள் ஐந்தாமிடத்திலிருக்க நாலாமிடத்தில் ஆறாமிடம் எட்டாமிடத்திலிருந்தாலும் பகையான கிரகங்கள் ஜனனமான குழந்தை மரணமாகும் எ-று 20

சோமனாரிந்த வீட்டின் சொல்லிடஞ் சனியேநிற்கச்
போமனார் வலமாயாறிற் ழீயருங் குடுவுஞ்சுங்கன்
பாமனா ரிவற்கே ரெண்டிற் பனியிந்தி கூடிநிற்க
ஏமனார் கூடவந்திங் கிழுத்துடன் போவன்றானே

(இ-ள்) ஜனன லக்கினத்திற்கு முன்னும் பின்னும் சனியும், இராகுமிருக்க எட்டாமிடத்தில் குருவும், சுக்கிரன், மூன்றா மிடத்திலும் சூரியன் நாலாமிடத்தில் நின்றால் ஜனனமான குழந்தைக்கு மரணமுண்டாகும் எ-று

எட்டவ னிருந்தவீட்டி லிரவியும் பாம்புங்கூட
மட்டெனவர்க்கேழின் மகிழ்ந்துடன் செவ்வாய்சேர
விட்டவனிடத்தில் மந்தன் விண்மதியிவர்க்கேயாறில்
மட்டுடன் சுபருநீமசமாயினாற் குழவி சாமே

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்) சுக்கிரனுக்கு எட்டு பனிரெண்டாமிடத்தில் சூரியன் சனி செவ்வாய் குரு நிற்க அந்த ஸ்தானத்திற்கு எட்டில் ராகு நிற்க சனிக்கு நான்கில் சந்திரனிருக்கும்போது ஜனனமான குழந்தை ஒரு வருசத்தில் மரணமாகும் எ-று 22

தாழ்த்தியவெட்டோனீசஞ் சதிர்பின்னோனஸ்தமிக்க
வாழ்த்திய வுதைவத்தானும் வலமது செவ்வாய்கூட
வாழ்த்திய வரவங்காரி மதிக்கேழி ணின் றாராகி
போற்றிய தனத்திற்சுங்கன் புந்தியு நின்றாற்சாமே

(இ-ள்) ஏழு லக்கினம் பத்தாமிடத்தில் சனி செவ்வாய் பாபகிரகங்களிலிருந்தாலும் சந்திரன் சுபகிரகங்களில் ஸ்தானத்திலிருந்தாலும் ராகு எட்டாமிடத்திலிருந்தாலும் ஜனனமான குழந்தை மரணமாகும் எ-று 23

குருவினிற் கெட்டிற்க்கரி குருட்திக் காறிற்பாம்பு
பிறருக்கு மாறிற்சேய்க்கும் பிறகினோ னஸ்தமிக்க
மறுவொக்கப் பிநல்நீச மகிழ்ச்சியில் லாயனிற்த
கருவற்றுப்போமேபிள்ளை கண்டுடனுரைப்பாம்மாதே

(இ-ள்) கோணாதிபதிகள் சேர்ந்து அஷ்டமஸ்தானத்திலிருந்தால் சந்திரனும் குருவும் எட்டாமிடத்திருக்க செவ்வாய் இரண்டிலிருக்க ராகு நாலிலிருக்கும் போது ஜனனமான குழந்தை மரணமாகும் எ-று 24

கதிருதையத்துக்கெட்டோன் கனக்கவேயுதையஞ்சேர
அதைச்சரி காரிசெவ்வா யமர்ந்துடணிருக்கத்தானும்
எதிரெதிர்ச் சுபரில்லாம் லிருக்கினு மாதேகேளாய்
சதிரொரு நாளுநில்லாச்சாவது வருவதுண்டே

(இ-ள்) சூரியன் சந்திரன் சனியும் ஒன்றாய்ச் சேர்ந்து நிற்க குரு எட்டாமிடத்திலும் ராகு கோணத்திலிருக்க தனஸ்தானத்திற் செவ்வாயும் சுக்கிரனுமிருந்து சனனமான குழந்தை மரணமாகும் எ-று 25

அருக்கனுக் கெட்டோன் கனக்கவேதையஞ்சேர
உருக்குமா யுதையத்தானு மொருமையா யசதமிக்கப்
பெருக்கமாய்சோமற்கெட்டோன்பின்புடன் மதியுஞ்சேர்ந்தால்
அருக்கமாய்ப் பிறந்தபிள்ளை யன்றிரவதனிற் சாமே

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்) செவ்வாயும் சனியுமெட்டாமிடத்தில்லக்கினாதிபதியுடன் சூரியன் சேர்ந்திருந்தால் அஷ்டமாதிபதியிருந்தாலும் பிறந்த குழந்தை மரணமாகும் எ-று 26

புந்திமதிசுங்கன் கன்னி பொருந்தியநான் கின்மந்தன்
விந்திய பாபரெண்டில் கவய்யவன் விரையநிற்க
அந்தியுஞ்செவ்வாய் பத்தி லாறிநிற் குருவேநின்றார்
சந்தேகமில்லை மாதே சாவதுமுடனேயுண்டு

(இ-ள்) பத்துக்குடையவன் பின்னால் செவ்வாய் ஐந்தாமிடத்
சூரியனுடனே சேர்ந்தாலும் பார்த்தாலும், சனியும் லக்கினா
திபதியும் சேர்ந்திருக்க ஐந்தாமிடத்ததிபதி நீசமாயிருந்தால்
சாதகன் ஆயுள் வரையிலும் மலடாயிருப்பதற்காகும் எ-று 22

கல்லுண்டான வனைந்திடமன்றிக் கரியோனிலகன் பகலில்லா
வில்லுண்டானவனும் முதயவனு மேருவில்வெள்ளிகெதிரல்ல
சொல்லுண்டானவனைந்தோன்கூடிச் சொற்சிறுமீனடிதலை
யில்லா
அல்லுண்டானவனைந்தடியானாலவர்க்கே வகுபுத்திரருண்டா

(இ-ள்) ஐந்தாமிடத்ததிபதி நீசமாயிருக்க, அந்த ஸ்த
னத்தை குரு பார்த்தாலும் சனி ஐந்துக்கும் ஏழுக்குடையவ
னோடு சேர்ந்திருக்க லக்கினாதிபதி சூரியனுடன்செவ்வாயுட
னும் சேர்ந்தாலும் பார்க்கப்பட்டாலும் அந்த சாதகன் பூமியிற்

பிறந்த நாளாய் மலடனாயிர்ப்பதற்காகும் எ-று
அஞ்சிடமஞ்சோன்மந்திரி யவரிருந்திடத்தைப்பாபர்
மிஞ்சிடப்பாராராகில் மிகையஸ்தமானமில்லா
தொஞ்சிடமுன்பின்பாபர் தோன்றியநில்லாராகிற்
கொஞ்சிடவநேகம்புத்திரர் கொடுபகை நீசமன்றேல்

(இ-ள்) ஆறு எட்டுக்கதிபதிகள் சேர்ந்து ஐந்தாமிடத்திலு
மிருக்க குரு நீச ஸ்தானத்திலிருக்க, குறு ஐந்தாமிடத்திலு
சேர்ந்து லக்கினத்தில் சனியும் குளிகனும் சேர்ந்திருந்தால் அவர்
களை அஷ்டமாதிபதியும் சந்திரனும் செவ்வாயும் பார்த்தால்
அந்த சாதகன் மலடனாயிருப்பதற்காகும் எ று 24

ஈரஞ்சுடையோனேரஞ்சிலிருந்தோர்கோழினான் குடையோன்
ஓரஞ்சுடையானீரஞ்சி லொருமித்திரருஞ்சணிக்கேழிற்
பாராஞ்சிடையினோக்கமில்லாப் பாபரொதுங்கி நிற்கிலுமே
சேரஞ்சிடையின்சுபர் நோக்க செழிக்க வெகுபுத்திரருண்டே

(இ-ள்) ஆறுக்குடையோன் சூரியனுடனே சேர்ந்து எட்டி
லிருக்க இரண்டு மூன்றில் எட்டாமிடத்ததிபதி வச்சிர கிரகத்
துடன் சேர்ந்திருக்க குரு நீசகாயிருக்க லக்கினத்தில் சனியும்


CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சந்திரனும் ராகும் சேர்ந்திருந்தால் ஜாதகன் மலடாயிருப்பான் எ-று 25

மன்னவனஞ்சினோக்கில்லா மனையவன் கரியதற்கெதிருல்ல
என்னவனஞ்சிலிருக்கில்ல விருபலருக்கன் குசனில்லா
அன்னவனஞ்சேழ்போக்கில்லாவம்புலிநின் றவர்க்கெதிரில்
சொன்னவனஞ்சேழ்கரியில்லாச் சொல்லுங்குழவியது நில்ல

(இ-ள்) பத்தாமிடத்தில் பாபகிக்கங்கள் நீசமாயிருக்க லக்கினாதிபதியும் சுக்கிரனும் ஐந்தாமிடத்திலிருக்க ஏழாமிடத்திலிருந்தால் அந்த சாதகனுக்கு புத்திரர்களிலிருக்காது எ-று 26

ஆட்டினிலாரனற்க வஞ்சிடமதுவேயாக
வீட்டினிற்குருமீனாகில் வேண்டியபுத்திரருண்டு
கேட்டவர் குரைக்கலாகுங் கேடிலாதிருக்குமாதே
ஓட்டுரையேழின் மந்த னிருந்திடாதிருக்கின் மெய்யே

(இ-ள்) சனி ஐந்தாமிடத்ததிபதி நட்பாயிருக்க குருவுடனே பாப கிரகம் சேர்ந்து உதயராசியிருக்க அந்த ஜாதகனுக்கு பிள்ளைகள் பிறந்தாலும் நசிந்து போகும்படி சொல்வாய் எ-று 27

கேளினிற்செந்திவண்ணன் செனித்ததுக்கைந்தேயாக
ஆளுமோரரசன் வில்லிலமர்ந்துடனிருந்தானாகில்
மாளுமுக்கோணம்பின்னே மந்தனுமில்லாதாரால்
கேளு நீபுத்ரருண்டு கேட்டவர்க்குரைப்பாய் மாதே

(இ-ள்) ஐந்துக்குடையவனுடனே பரபகிரகங்கள் சேர்ந்திருக்க அவர்களுடன் சுபக்கிரகங்கள் சேர்ந்திருக்க குருவும்பாப கிரகங்களும் மத்தியிலிருக்க சந்திரன் செவ்வாயுடனே சேர்ந்திருக்க அந்த சாதகனுக்கு பிறக்கும் புத்திரர்கள் மரணமாய் விடும் எ-று 20

அரியவனாட்சியைவோ யமர்ந்தொரு குருவேமேஷம்
பெரியவனாகிமந்தன் பேருதிமிநுனமாகில்
அதிற்சந்தியுடனே புந்திசத்துருவன்றி நிற்கத்
தெரியவர்க் கெட்டோர்க்கின்னந் திரள் புத்திரரென்று சொல்ல

(இ-ள்) ஐந்தாமிடத்தில் சூரியனிருக்க அவர்க்கு நாலுக்கும் ஐந்துக்கும் அதிபதியாக சனி செவ்வாயிருக்க நான்காமிடத்தில்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

குருவிக்க லக்கினத்தில் சந்திரன் தேய்பிறைச் சந்திரனாயிருக்க அந்த ஜாதகனுக்கு பிறக்கும் பிள்ளைகள் மரணமாகும் எ-று 29

இருந்த வனைந்திற்பெண்ணாயிடமவனாணோயாகிப்
பிறந்தவன் புருஷனாகிப் பெருமதியிடந்தோன்பெண்ணாய்ப்
பொருந்தவர்கேந்திரகோணம் பொன்னுகேயாகி நின்றால்
வருந்தவவோமேவேண்டாம் வந்திடுமாணும் பெண்ணும்

(இ-ள்) ஆறாமிடம் நாலாமிடத்தில்சூரியனும்சனியுமிருக்க அதற்கு நாலாமிடத்தில் குருசெவ்வாயுமிருக்க மூன்றாமிடத்தில் ஐந்தாமிடத்திலிருந்துகுருவுக்குநான்கு ஏழாமிடமாயிருக்கஇலக்கினத்தில் சுபக்கிரகமிருந்தாலும் அந்த ஜாதகனுக்கு பிறக்கும் பிள்ளைகள் மரணமாகும் எ-று 30

மதித்தலம் புருஷனாக மன்னவரிருப்பிடத்துக்
செதித்தலமைந்தோன் பொண்ணாய் கேந்திரமாகி நின்றார்
பறித்ததற் பெண்ணேயாகிப் பஞ்சவத்தோனே நிற்க
விதித்திடிமானும்பெண்ணும் வேண்டிய திரளேயுண்டு

(இ-ள்) சுக்கிரன் லக்கினம் மூன்றாமிடத்திலிருக்க லக்கினாதிபதி நீசமாயிர்க்க குரு நல்ல ஸ்தானத்திலிருந்தாலும் சனி சூரியனும் செவ்வாயும் நட்புஸ்தானத்திலிருந்தால் ஜாதகனும் புத்திரரும் புத்திரிகளும் பிறந்தாலும் மரணமடைவார்கள் எ-று. 31

வெள்ளியுமைந்தினிற்சு வியாழனுக்கதுவீடாகத்
தெள்ளியமறையோநின்ற சீர்மனைச்சோமற்காக
அள்ளியவைந்தோ நின்றவம்மனைச் சுங்கர்க்காக
முள்ளில்செண்பகமேல்வீசு மொய்குழற்பெண்களுண்டே

(இ-ள்) ஜனன லக்கினத்தில் பாபகிரகங்களிருக்க கர்மஸ்தானத்தில் பகை கிரகமிருக்க லக்கினாதிபதி ஆறு எட்டாமிடத்திலிருக்க தர்மஸ்தானத்தில் ராகு இருக்கசெவ்வாய்ஐந்தாமிடத்திலிர்க்க அந்த ஜாதகனுக்கு பிறக்கும் பிள்ளை அப்போதே மரணமாகும் எ-று.

அம்புலியைந்திநிற்க வம்மனைசுங்கர்க்காக
நம்புநல்லைந்தோன்சுங்க னடுமனையதணிகூடச்
செம்மறையவன்றான் செண்டிய்சேல்பெண்ணங்கிசமேயாகல்
இம்மணிலிர்க்குமட்டு இவனுக்குப் பெண்களுண்டே

CC-0.TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்) பூரண சந்திரனும் குரு சேர்ந்திருந்தாலும் ஐந்தாமிடத்ததிபதியும் சுக்கிரனும்மூடமாயிருக்க சனி ஆறாமிடத்திலிருக்க குரு ஐந்தாமிடத்திலிருந்தால் அந்த ஜாதகனுக்கு பிறக்கும் குழந்தை நாசமாம் மரணமாகும் பெண்ணே எ-று. 33

பொன்னவனைந்தோனின்ற பொருதிநியதனுங்கூட
நின்றவநிதர்சேழ்நின்றோ நிலைபெண்ணங்கிசமேயாக
மன்னவர்பாராராக மற்றதீக்கோட்களின்றி
என்னவனிருந்தாராகி லெந்நாளும் பெண்களுண்டே

(இ-ள்) சுபக்கிரகங்களும் சேர்ந்திருக்க அவர்களுடன் குருவும் கலந்திருக்க ஐந்தாமிடந்தோனும் பாபக்கிரகம்பலவானாய் சேர்ந்திருக்குமானால் அந்த ஜாதகனுக்கு பிறக்கும் பிள்ளை மரணமாகும் எ-று 34

மலடறிய

உதையத்துக்கைந்தின்மந்த னோரெட்டிற்பூமனிற்க
அதையத்துக்கேழில்ராஜனைந்தவன் களவிற்சேர
மதியத்திலரவஞ் சேர்ந்து மந்தனுக்கேழியாகில்
விதியத்தின்மலடனென்று விளம்பினர்நூல்வல்லேரே

(இ-ள்) லக்கினாதிபதியும் சந்திரனும் ஐந்தாமிடத்திலிருக்க குருவும் சுபகிரகங்களும் பார்வை செலுத்தாமல் அவர்களிருந்த ஸ்தானமும் பகை நீசஸ்தானமாயிருந்தால் அந்த ஜாதகன் முன் ஜன்மத்தில் செய்த பாபத்தினால் புத்திரர்களில்லையென்று சொல்வாய் செல்வாய் பெண்ணே எ-று.

பத்துடன்பின்கேயைந்திற் பகலவநிருக்கநோக்க
ஒத்துடன் காரிலாப மூதையனுங்கூடிநிற்க
அத்துடனைந்தோளீச மாயினான்மாதேகேளாய்
செத்துடன் பிறப்பில்லாமற் சென்மாதிமலடனாவான்

(இ-ள்) குருவும்சந்திரனும் சேர்ந்திருக்கும்போது வேறெந்த கிரகமும் பாராமல் ஐந்தாமிடத்திலிருக்குமானால் அந்த ஜாதகனுக்கு சாதகாலமும் புத்திர நாசமாயிர்க்கும் ஆனால், சுபகிரகங்கள் தானேயென்று நினைக்கலாகாது எ-று 36

**புத்திர காண்டம்-முற்றிற்று ஆக. 468**

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

# சகோதரக் காண்டம்

| | | | |
|---|---|---|---|
| விரய ஸ்தான | இலக்கினம் | தனகுடும் ஸ்தானம் | சகோதர ஸ்தான |
| லாப ஸ்தான | இராசி சக்கரம் | | சுகஸ் தானம் |
| ஜீவன ஸ்தான | | | புத்ரஸ் தானம் |
| பாக்ய ஸ்தான | ஆயுள் ஸ்தான | கனஸ் ஸ்தான | ரோக ஸ்தான |

அந்தமாயைந்தேரனீ சமதிற்குருபார்வையாகின்
மந்தனாரைந்துக்கேழின் மழவிடை சேர்ந்துநிற்க
இந்தொரிலக்கினாதியீர விசேய் பார்க்கக்கூட
எந்த நாளளவுமட்டு மிருப்பனே மலடனாக

(இ-ள்) மூன்றாமிடத்தில் பாபகிரகமிருக்க அந்த ஸ்தானத்திற்கு முன் பின் விருக்கும் கிரகங்கள் அஸ்தமனாயிருக்க, சனி ஒன்பதாமிடத்திலிருக்க இவர்க்கு நாலாமிடத்தில் வச்சிரகிரகமிருக்க அந்த ஜாதகனுக்கு சகோதரரில்லாமல் தனியாயிருப்பதற்காகும் எ-று 1

ஆறெட்டுக்குடையோர் சேர்வுற் றைந்திடமாக நிற்க
வேறிட்டுறையோனீசம் வேந்தனுமைந்தோன்சேரக்
கூறிட்டவுமதையங்காரி குளிகனுங்கூடி நின்றால்
மாறொட்டின் மதிசேய்சேர்ந்தான மலடனேமலடன் மாதே

(இ-ள்) லக்கினத்திலும் இரண்டாமிடத்திலும் செவ்வாயும் ராகு ஐந்தாமிடத்திலிருக்க லக்கினாதிபதியும் சனியும் சேர்ந்திருக்க சந்திரனுடனே ராகு சேர்ந்திருக்கும் இந்த ஜாதகன் சகோதரரில்லாமல் தனியாயிருப்பதற்காகும் பெண்ணே எ-று 2

இருமூக்குடையோரெட்டி லிருந்திடவிரவிகூட
வருமூன்றிலிரண்டிலெட்டோன் வக்கிரன் சேர்ந்து நிற்கக்

CC-0.TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

குருநாணி நீசமாகிக் கொண்டிடுமுதைய நீலன
பருவான மதியும் பாம்பும் பற்றினான் மலடனாவன்.

(இ-ள்) குரு, எட்டாம் இடத்திலிருக்க செவ்வாயும் சனியும் சேர்ந்திருக்க குருவும் மூன்றாமிடத்ததிபதியும் சேர்ந்திருக்க அவர்களுடனே ராகு சேர்ந்து ஆறாமிடத்திலிருந்தால் அந்த ஜாதகனுக்கு சகோதரரில்லாமல் ஒவ்வானாகவே தனியாயிருப்பதற்காகும் எ-று 3

ஈரைந்திற்பாபியாகி பினியவர் நீசமாக
ஒரைந்திலுதையத்தானு மொருவெள்ளிமதியுங்கூடப்
பாரைந்துக்கேழிற்பரம்பு பற்றியே நின்றானாகில்
ஆரைந்து தபமானாலு மவனுக்கே புத்திரரில்லை

(இ-ள்) ஆறாமிடத்ததிபதி மூன்றாமிடத்திலிருக்க சந்திரனுடனே ராகு சேர்ந்திருக்க மூன்றாமிடத்தபதி எட்டிலிருக்க சனிக்கேழில் செவ்வாயிருக்க ராகும் சேர்ந்திருந்தால் அந்த ஜாதகனுக்கு சகோதரரில்லாமல் உலகிலிருப்பான் மாதே எ-று4

முடவனாரைந்தினிற்க முதற்பிறையுடனேபாபி
இடமதாவைந் தோனட்பா யினிக்குருவுடனே பா பி
திடமதாயுதையந்தன்னிற் சிதனுமே நின்றானாகில்
நடவதேபுத்திருண்டாய் நசிந்துடன் போமேசொல்வாய்

(இ-ள்) சுக்கிரனுடனே சேர்ந்து சூரியன் மூன்றிலிருந்தால் செவ்வாய் ஐந்தாம் இடத்திலும் அவர்க்கேழாமிடத்தில் சந்திரன் இருக்க ஜனன லக்கினத்தில் ராகு சேர்ந்திருக்க சனியுடனே மூன்றாம் இடத்ததிபதி சேர்ந்திருந்தால் ஜாதகனுக்கு சகோதரனில்லாமல் இருப்பதற்காகும் எ-று 5

அஞ்சவன்பாபிசேர வதனிடைச் சுபரே நிற்க
மிஞ்சியேகுருவும்பாபர் நடுவதின்மிகையோராகக்
கொஞ்சவனான திங்கள் குசனுடன் சேர்ந்துநிற்க
வஞ்சியேபிறக்கும்பிள்ளை வகையறமடிந்துபோமே

(இ-ள்) மூன்றாம் இடத்ததிபதியுடனே பாபக் கிரகங்களும் சந்திரனும் சேர்ந்திருக்க அவர்கட்கெதிரில் ராகு நிற்க வளர்பிறை சந்திரனுக்கேழில் சனியிருக்க குரு நின்ற ஸ்தானத்திற்கு ஏழு ஆறாமிடத்தோனும் சேர்ந்திருந்தால் இந்த ஜாதனுக்குப் பின் சகோதரரில்லைமாதே எ-று 6

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

அஞ்சிணிலலரிநிற்க வளர்க்குநானாந்தோனாக
மிஞ்சினான் மந்தன் பூமன் மிகுந்தநானரசே நிற்க
தஞ்சுதையத்திற்சோமன் றான்குன்றிநின்றானாகில்
இஞ்சிபோதித்த யிலுள்ளை யிறந்திடுநாசமாக

(இ-ள்) சனியும் செவ்வாயும் சேர்ந்திருக்க லக்கினத்திலும் மூன்றாம் இடத்திலும் சூரியனுடனே மூன்றாம் இடத்ததிபதி யிருக்க சுபக்கிரகங்கள் பாராமலிருந்தால் மூன்றாம் இடத்தில் ராகு இர்க்க நான்கில் சந்திரன் இருந்தால் அந்த ஜாதகனுக்கு பின் சகோதரரில்லை மாதே எ-று

ஆறுநாலலரிமந்தனதற்கு நூல் குரு செவ்வாயும்
வீறிநாலைந்தோ நிற்க வேந்தற்கு நாலேழாக
தூறினாலுதையந்தன்னிற் சுபருமேநின்றாராகில்
மாரிலாவுதிக்கு பிள்ளை மரணபாநாசமாக

(இ-ள்) மூன்றாம்இடத்தில்பாபக்கிரகங்களிருக்க செவ்வாய் நீசமாயிருப்பதுடன் மூன்றாமிடத்தபதிக்கு இருபுறமும் பாபக் கிரகங்களிருந்தாலும் ராகுசனி சூரியனும்சந்திரனுக்குநான்காம் இடத்திலிருந்தாலும் ஜாதகனுக்குப் பின்சகோதரரில்லை எ-று8
மூனொன் திற்சுங்க நிற்க முன்னவணினமாக
வேணிமென்றாசனல்ல விடமதாய் நிற்கத்தானு
பூணுகொண்டலரிகாரி பூமனுமுறவேயாகில்
வேணுமேயாணும் பெண்ணும் விளைவதுமடியுந் தீம்பாய்

(இ-ள்) மேற்குறிப்பித்த விதமே இருந்தாலும் அந்த ஸ்தானத்தில் குருவும் சுக்கிரங்களும் சேர்ந்தாலும்பார்த்தாலும் புதனும் சுபக்கிரகங்களும் சேர்ந்தாலும்பார்த்தாலும் சுபக்கிர கங்களின் திசையில் பின் சகோதரர்களுண்டாகும் ஆனால் நிலைத்திருக்காது எ-று.

செென்மத்திற்பாபி நிற்க சீதரனுடனே தீயர்
கன்மத்திற்பகையோராசக் கருத்துள்ளோரெட்டாகத்
தன்மதல்லரவஞ்சேர்ந்து தரைமகனைந்தினின்றால்
துன்பத்திலுதித்தகளை தோன்றியவன்றேநாசம்

(இ-ள்) செல்வாக்கு நாலாம் இடத்தில் குருவும் புதனுக்கு ஏழாமிடத்தில் மூன்றாமிடத்ததிபதியும் சந்திரனுக்க மூன்று நாலாமிடம் சுக்கிரனும் சனிக்கு ஏழாமிடத்திலிருக்க இம்மூன்று கிரகங்களும் மத்தியில் சூரியனும் ராகுமிருக்க சந்திரனுக்கு செவ்வாய்நாலாமிடத்திலிருந்தால்சகோதரர்களுண்டாகுமென்று சொல்வாய் எ-று.



CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

பூரணமதிபினோடு புண்ணியர் மேலானாலும்
காரணமானவைந்தோன் கனகனுமுடமானாற்
கூரணிகாரியாறில் குருவைந்திநின்றாராகில்
வாரணிதனத்தினாளே வருமந்தகுழருநாசம்

(இ:ள்) ஆறாமிடத்தில் சுபகிரகங்கலிருக்க அர்த்தஸ்தானாதிபதியும் அந்தஸ்தானத்திலேயேயிருக்க அவர்களை பாபக்கிரகங்கள் பாராமலிருக்க செவ்வாய் ஆக்ஷியாய் விருச்சிகத்திலிருக்க ஐந்தாமிடத்தில்குருஇருக்கஇவர்களுக்குநாலாம்இடத்தில்சந்திரனிருக்க அந்த ஜாதகனுக்க அநேக சகோதரர்களுண்டாகும் எ:று 11

நண்ணியசுபரும்பாபர் தலந்தியர் கலந்துநிற்க
அண்ணியேவருகிம்ராஜ னவர்டன் கலந்துநிற்கப்
புண்ணியவைந்தோன் பாகி பிலவனாயிர்ந்திட்டாலும்
நின்றியமானகாளை நில்லாது கொஞ்சநாளே

(இ:ள்) லக்கினாதிபதியும் இரண்டாமிடத்ததிபதியும்ஆக்ஷியாயிருப்பதுடன் அவர்களுடனே குரு சேர்திருத்க பாபக்கிரகங்கள் பார்வை செலுத்தாமல் ஆறாமிடம் இரண்டாம்இடங்களிருந்தால் செவ்வாயும்சுக்கிரனும் சேர்ந்திருந்தால்அந்தஜாதகனுக்குவேண்டிய சகோதரர்கள் விஷேமாயிருப்பார்கள் எ று 12

அண்ணியலக்னஞ்சோம னைந்திடஞ்சேராஜன்
புண்ணியர் பார்வையின்றிப் போயிர்ந்திடமுந்திதாய்ப்
பண்ணியபாவத்தாலே பாவரேமிகுத்துநின்றால்
எண்ணெருபுத்திரரில்லை யேந்திழைமாதேகேளாய்

(இ:ள்) நாலாம் இடத்திற்குப்பின் ஸ்தானமாகிய மூன்றாம் இடத்தோன் ஆக்ஷி உச்சமாயிருக்க ஐந்தாம் இடத்தாலும் ஆக்ஷியாயிருக்க அங்காரகன் புதன் குரு சேருந்திர்க்க மூன்றாம் இடத்தில் சந்திரநும் பனிரெண்டாமிடத்தில் சூரியனும் இருக்க அந்த ஜாதகனுக்கு அநேக சகோதரர்களுண்டு எ:று 13

வியாழமூந்திங்கள் கூடி வேறோர்கிரகம் பாராச்
சசாயமாயைந்திணிற்கச் சுந்தகம் புத்திரநாசம்
நியாயமாய்ச் சுபரேயென்று நினைவதில் நினைக்கலாகா
துபாயமாய்ப்பார்த்துச் சொல்வாயுமது குறிதப்பாதே

(இ-ள்) ஒன்பதாம்இடத்தில் குருதனியாயிருக்கசந்திரனாய் ஸ்தானத்திவிர்க்க பாபக்கிரகங்கள் நீசமாய் சுக்கிரன் லக்கினத்

CC-0.TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

திலிருக்க அந்த ஜாதகனுக்கு அநேக சகோதரர்களுண்டு மாதே
எ-று 14

மூணினிற்பாபியாக மின்பின்னோரஸ்தமிக்க
வேறுமேநவத்தின்மந்தன் வக்கிரனிவர்க்கேநான்காய்
காணவேசுபரில்லாமற் கடுர்பகையாகி நின்றால்
ஆணுமோரில்லா னென்னச் சகோதரமில்லைமாதே

(இ-ள்) செவ்வாய் மூன்றாவது ஸ்தானத்தை சுபக்கிரகங்
களுடனே பார்த்தாலும்சேர்ந்திருந்தாலும்லக்கினாதிபதிசந்திர
னாயிருக்க அந்த ஜாதகனுக்கு அநேக சகோதரர்களுண்டாயி
ருக்கும் மாதே எ-று 15

ரெண்டோருவிடத்திர் ர்பூம னிராசுருமைந்தினிற்கக்
கண்டொருவுதையத்தானுங் காரியுங்கூடிநிற்க
நண்டிருமேனியோட நாகடேகலந்து நிற்க
விண்டொருதனியாகி மேதினி யிருப்பன்மாதே

(இ-ள்) மூன்றாம் இடத்திற் செவ்வாயும் தனியாயிருக்க
அவருக்கு ஏழாமிடத்தில் சனியிருக்க இவருக்கு முன்னால்ராகு
நிற்க சூரியன் ஏழாமிடத்திலிருக்க புதனும் ராகுமிருந்தால் பின்
சகோதரன் கிடையாது ஆனால் அந்த காலத்தின் குறிப்பை
கவனித்துச் சொல்வாய் மாதே எ-று 16

பொன்னவனெட்டிற்கப் பூவனுஞ்சனியுங்கூட
வின்னவர்க்காட்சியான வேந்தனுமூன்றோன்கூட
அன்னவனரவங்கூடி யாறிநிநின்றாராகில்
நின்றவனொருவனாகி நிலைபெறநிர்ப்பன்மாதே

(இ-ள்) மூன்றாம் இடத்தில் செவ்வாயும் சனியுமிருக்கசுபக்
கிரகங்கள் பாராதிருந்தால் சகோதர மார்க்கமுண்டாகும் சூரிய
னும் மூன்றாமிடத்தானுஞ் சேர்ந்திருந்தால் பத்து வருஷம்
பொறுத்தாவது இளைய சகோதர பாக்யமுண்டாகு மென்னும்
குறி தப்பாது எ-று 17

ஆறவன்மூன்றிநிற்க வப்புவியுடனே பாம்பு
கூற்றியுடனே மூன்றோன் கூடியேயெட்டிநிற்க
கார்கரிக்கேழிர்ச்செவ்வாய் கழிநாகங்கூடிநின்றால்
வேறொருதுணையில்லாமல் மேதினியிருப்பன் மாதே

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்) மூன்றாமிடத்தில் குருவும் சந்திரனும் சேர்ந்திருக்க இவர்கள் நன்மை செய்யவென்று நினைக்கலாவாது இவர்கள் சுபக்கிரகங்களென்று நம்பலாகாது இது எவ்விதமாயிருந்தால் சாதகனுக்கு பின் சகோதரர்கள் கிடையாதெனுங்குறிதப்பாது எ-று 18

## சகோதர காண்டம் முற்றிற்று ஆக 552

# மாருது காண்டம்

| | | | |
|---|---|---|---|
| மீனம் 4¼ 12வது | மேஷம் 4¼ 1வது | மேஷம் 4¼ 1வது | மிதுனம் 5¼ 3வது |
| குப்பம் 4¼ 11வது | இராசி 12 60 நாழிகை | | மிதுனம் 5½ 4வது |
| மகரம் 5¼ 10வது | | | சிங்கம் 5 5வது |
| தனுசு 5½ 9வது | விருச்சி 5¼ 8வது | துலாம் 5 7வது | கன்னி 5 6வது |

சுங்கனாருடனேகூடிச் சூரியன் மூன்றிநிற்க
அங்கனேயை சேற்செவ்வாயதர்க்கேழிற் பிறையுதிக்க
இங்கானாருதையந்தன்னி லிந்ர்திடப் பாம்புதானும்
செங்கரியுடனேமூன்றோன் சேர்ந்திடிலொருவனாமே

(இ-ள்) லக்கினத்திலும் நான்காமிடத்திலும் சுபக்கிரகங்களிருக்க சந்திரனுடனேநாலாமிடத்ததிபதிசுபகிரகங்களுடனே சேர்ந்திருக்க அவர்களை சூரியனும் சனியும் செவ்வாயும் பாராமலிருந்தால் குருவும் நான்காமிடத்ததிபதியும் சந்திரனையும் ராகு பாராதிருந்தால் அந்தசாதகனுக்குமாதாபூர்ணாயுசா இருப்பயிற்காகும் எ-று 1

திரிவுடமருவப்பாபர் திங்களுங்கூடிநிற்க
எதிரிடமரலநிற்க விளமதிக்கேழிற்காரி
குருவிடமதர்கேழாறிற் குருமதிநான்கேயாகிப்
பருதியமூன்றோன் கூடிற் பாலன்பின்னில்லேமாதே

CC-0.TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்) பத்தாமிடம் ஏழாமிடம் நாலாமிடங்களில் பாபக்கிரகங்ளிகல்லாமல் சுபக்கிரகங்களே இருந்தால்நான்காம் இடத்ததிபதி பாக்கிய ஸ்தானத்திலிருக்க அவர்களுடன் குருவும்சேர்ந்திருக்க பனிரெண்டாம் இடத்ததிபதி ஆசியாயிருந்தால் ஜாதகனுடைய மாதா சதாகாலமும் சுகமாயிருப்பதற்காகும் எறு 2

காரிமாரல்கூடக் கண்டொருவுதை மூன்றிற்
சூரியனுடனேமூன்றோன் சுபருமேபாராராகில்
வீரியவிடையினாகம் விண்மதிநான்கேயாகிற்
பாரிவனுதித்தபின்பு பால்னேயில்லைமாதே

(இ-ள்) சுக்கிரன் நான்காம் இடத்திலிருக்க சூரியன் சனி செவ்வாயும் பாராமலிருக்கசந்திரன்ஏழாம்இடத்திலும்சுக்கிரன் நான்காம் இடத்தில் உச்சமாயிருக்க லக்கினத்தில் வளர்பிறைச் சந்திரனிருததாலும் ஜாதகனுடையதாய் நூறு வயது வரையில் ஜீவித்திருப்பதற்காகும் எ-று 3

அங்கொரு முன்டிற்பாப ரமர்ந்தொருசெவ்வாய் நீசம்
இங்கொமுன்றோன்பரவி யிருபுறமிர்ந்தாராயிற்
செங்கருவரவங்காரி திவாகரன் சசிக்குநான்காய்
எங்கிருந்தாலுமாதே யினிச்சகோதரமேயில்லை

(இ-ள்) லக்கினாதிபதியும் நான்காம் இடத்ததிபதியும்ஏழாமிடத்ததிபதியும், பத்தாம் இடத்ததிபதியும் சேர்ந்துகோணத்திலிருந்தாலும்அந்த ஸ்தானாதி கேந்திரத்திலிருந்தாலும் ஜாதகனுடைய தாயின் சுற்றம்குறையாமலிருக்கும்சந்திரனையும் மூன்றாமிடத்தையும் செவ்வாய், சனி, சூரியனும் பாராமலிருந்தால் ஜாதகனுடைய தாய் உலகத்தில் நூறுவயதுவரையிலும் இருப்பதற்காகும் எ-று. 4

இப்படிருத்தபோதி லிதிற்குருசுங்கன்கூட
நற்படச் சோமன்புந்தி நலமுள்ளோர்கூடப்பார்க்கச்
சொற்படச்சுபர்நலத்திற்றோன்றிடுஞ்சகோதரங்கள்
மெய்ப்படி நம்பவேண்டா மேலாகி நில்லாமர்மாதே

(இ-ள்) வளர்பிறைச் சந்திரன் ஆசி உச்சமரய் பாபக்கிரகங்கள் பார்வை பாராமல் நான்காம் இடத்தில் குருயிருக்க அவரை சத்துருகிரகங்கள் பாராமல் அவர்கள் கேந்திரஸ்தானங்களிலிருந்தால் அந்த ஜாதகனுடைய தாய் நூறு வருஷமிருப்பதற்காகும் 9

பூமற்கு நான்திற்பொன்னும் புந்திக்கோரேழின்
மூன்றேன்
காமர்கு மூன்று நான்காய்க் கருவெள்ளிக்கரிக்
கேழாகின்

CC-0TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

மூவர்க்குநடு மூன் றாக மூன் றினிலிர விபரம்பும்
சோமற் றச் சேய்நான் கிற் சொல்சகோதர முன்டே

(இ-ள்) நான்காம் இடத்ததிபதியும் சந்திரனும் ஏழாமிடத்ததிபதியும், சம்தானாதிபதியும் சுபகிரகங்களாயிருந்தால் ராகு சூரியன் செவ்வாயை பாராமலிருந்தாலும், ஒன்பது ஆறு, எட்டாம் இடத்திலிருந்தாலும் அந்தஜாதகனுடைய மாதாவின் குற்றம் யாதொரு குறையும் இல்லாதிருப்பதுடன் ஜாதகன் நாறு வயது வரையிலும் இருப்பதற்காகும் ஏ-று.

ஆறினிற் சுசரிருக்க வதர்க்கதியதிலேநிற்க
வேறொருபாபர்பாரா விருச்சிகனாட்சியாகி
ஈரரையரச நிற்க விவர்க்குநால்சோமனாகில்
மேலுரைச்சோதரங்கண் மிகுதியாயுண்டுமாதே

(இ-ள்) நாலுக்கு நாலாம் இடத்தில் சுபகிரகங்களில்லாமல் போனால் நாலாம் இடத்தானும் நீசஸ்தானத்திலிருக்கசந்திரன் மீனத்திலிருக்க ஜாதகனுடைய தாய்க்கு மாரகமுண்டாகும் ஏறு. 7

ஓரிருவிடத்தாரட்சி யொருமையாயரன் சேரப்
பாரிவருடனேபாபர் பார்க்கவுங்கிட்டாதாகி
ஆறுருவிடமாய் நிற்க வாரஞ்சுங்கன் கூடி
வீரியசகோதரங்கள் வேண்டியதிர ளாயுண்டே

(இ-ள்) பத்தாம் இடத்ததிபதியுடனே சனி செவ்வாய்பாபக் கிரகங்கள் ராகும் சேர்ந்து நிற்க, நான்காம் இடத்ததிபதியும் ஏழாம் இடத்ததிபதியும் நீசமாயிருக்க சுபக்கிரகங்கள் பகை நீசமாய் அஸ்தமயமயிருக்க தேய்ப்பிறைச் சந்திரனாயிருந்தால் ஜாதகன் தாய்க்கு மாரகமூண்டாகும். 8

நாலுபின்னவனேயுச்ச நலமுளவைந்தோனாட்
சேலுளல சந்தீவண்ணன் சிறுபுற்றிவியாழங்கூட
ஏலுளமூன்றிற்சோம னீராறிலைமந்தன்
மேலுடனின்றாகீன் மிகுச்சசோதரமேடிண்டே

(இ-ள்) நான்காம் இடத்தில் சந்திரன் இருக்க அவருக்கு நாலாம் இடத்தில் சூரியன் இருக்க ஜனனலக்கினத்தில் சனி இருந்து சுபர் சேராதிருக்க குரு ஆறு எட்டாம் இடத்திலிருக்க அந்த ஜாதகனுடைய தாய்க்கு மாரகமுண்டாகுமென்றும் குறி தப்பாது ஏ-று. 9

CC-0.TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

ஒன்பதாமிடத்தில்ராஜ னொருவனாய் நிற்கந்தானும்
இன்பமாய்ச்சோமனாறி லிருந்தவர்லாபந்தன் நில்
துன்பமாய்ர்பாபர் நீசஞ் சுங் கனுமுதைய நின்றால்
அன்பதாய்ச்சகோதரங் க ளனேகம்பேருண்டுமாதே

(இ-ள்) நான்காமிடத்திதிலும்ஏழாமிடத்திலும்பாபகிரகங்கள் நீசமாயிருந்தாலும் சந்திரன் வீட்டிலிருக்கும் சனி அஸ்தமிக்க நாலாமிடத்தில் குருவும் சூரியன் உதயலக்கினத்திலுமிருந்தால் சாதகனுடைய தாய் மரணமாவாள் எ-று 10

ஆரலுமூன்றேன் வீட்டை யவ்விடஞ்சுபரேபார்க்கச்
சேரலாய்க்கூடி நிற்கச் சென்மாதிபதியாக
வீறிலாதிருக்கப்பாபர் வேண்டிய சகோதரங்கள்
மாறிலாதிருக்குமாதே மணிமுடி சேஷனாக

(இ-ள்) குருவும் சந்திரனும் நாலாமிடத்திலிருக்க சாதகனுடைய வம்சந்தினரெல்லாம் மரணமாவார்கள் சுபகிரகங்களும் பாராமலிருந்தால் சாதகன் கர்ப்பத்திலிருக்கும்போதே மாதா மரணமடைவதற்மாகுமென்னுங்குறி தப்பாது எ-று 11

உண்டுபோமூன்றிற்செவ்வாயொருவனாயிவற்கேழ்
மைந்தன்
கண்டுபோஞ்சனிமூன்றாகிக் கனலவனேழேயாகில்
விண்டுபோஞ்கரிபாம்பானால்விளைவதுமில்லைபின்பு
கொண்டுபோஞ்சகோதரத்தைக் குறியதுகேளாய்
மாதே

(இ-ள்) செவ்வாய் நாலாமிடத்திலிருக்க அவரைச் சுபக்கிரகங்கள் பாராமலிருந்தால் சந்திரனுக்குநாலாமிடத்திலிருக்கசனி உதைய லக்கினத்திலிருந்தால் ஜாதகனுடையதாய் மரணமாவாள். 12

அத்துடன்போமேமூன்றிலாரலுங்காரி நின்றால்
செத்துடன்போமே தப்பிச் செல்வரும்பாராராகில்
விடுதுடனறுந்துபோமோவெண்கதிர்மூன்றேன்
சேர்ந்தாற்
பத்துவருடந்தன் நிற் பல இது குறிதப்பாதே

(இ-ள்) ஆறாமிடத்ததிபதியும் நாலாமிடத்ததிபதியும்நான்காமிடத்திலிருந்தாலும் நான்காமிடத்திபதி எட்டாமிடத்திபதியும் பனிரெண்டாமிடத்திலாகிலும் சந்திரன் ராகுடன் சேர்ந்து சூரியனும் ஜனன லக்கினத்திலிருந்தால் ஜாதகனுடையதாய் மரணமடைவதற்காகும் எ-று

CC-0.TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

நேசமாமூன்றில்வந்து நிகழ்குருசோமன்கூடில்
நாசமேமிவற்கடப்லைம நல்லவரைன்னம்போமோ
பாசமாஞ்சுபரேயெட பார்க்கவுநபயலாகா
மோசமாஞ்சகோதரங்கள் முடிவதுகுறிதப்பாதே

(இ-ள்) செவ்வாயும் சனியும் சேர்ந்து நான்காமிடத்தில் லிருக்கநான் காமிடத்ததிபதியும் அஷ்டமஸ்தானத்திலும் பல ரெண்டாமிடத்திலுமிருக்க இவர்களுக்கு ஆறு எட்டாமிடத்தில் சந்திரனும் ராகும் சேர்ந்திருக்க சூரியன்ஜனன லக்கினத்திலிருந் தால் சாதகன் தாய் மரணமாவாள் எ-று 14

உதையநால்சுபரிருக்க வுத்தமருடனே நாலோன்
சிதையாமற்சோமனிற்கத் திவாகரன் கரிசேய்பாரா
தகையாகக்குருநான்தாகி லரவமுமதியைப்பாரா
திதையாகனின்றானாகி லெந்நாளுஞ்தமேமாதர்

(இ-ள்) சூரியன் நாலாமிடத்திலிருக்க ஏழாமிடத்தில்சந்திர னும் சனியும், சேர்ந்திருக்க ஏழாமிடத்தில் செவ்வாய் ராகு சேர்ந்து ஜனன லக்கினத்திலிருக்க சுபக்கிரகங்கள் பாராமலிருந் தால் சாதகனுடைய தாய் மரணமாவதற்காகும் எ-று 15

பத்துநான்கேருற்பாப ரன்றியேசுபரிருக்க
முத்துநானகோணும் பாக்யமுன்னரசோனுங்கூட
எத்தினார்களையீராறி லிருந்தவராட்சியாகிற்
கொத்துபோற்றழைத்துமாதே குவலயதென்றுநிற்கும்

(இ-ள்) மேற்குறிப்பித்த விதமே பாபகிரகங்களிருக்க அவர் களை குரு சுக்கிரன் பார்த்தால் கொஞ்சம் சரீரவியாதியாய் சாதகனுடையதாய் மீதமாமெலிர்ந்திருப்பதற்காகும் மேற்குறிப் பித்த கிரகங்கள் ஐந்து ஆறாமிடத்ததிபதிகளானால் சாதகன் தாய் எட்டாவது வருஷத்தில் மரணமாவாள் எ-று, 16

விடையுநான் கிருக்கலன்றி வெயிலன்கரிசேய்பாராக
குடையுளோனிருக்கவேழுற் குறுகியேசுங்கனான்கில்
நடையுளோனுச்சமாகி நற்பிறைபுதையனிற்க
இடைசிறுமாதோகோ யிருப்பனேமாதர்நூறாய்

(இ-ள்) சுபகிரங்களும்பாபக்கிரகங்களும் சேர்ந்து நான்கா மிடத்தில் சுந்தகாய் செவ்வாயுடன் சேர்ந்து குருவும் ராகுங்கூடி லக்கினத்திலிருந்தாலும், சாதகனுடைய பதினாறு வருஷத்தில் தாய் மாணமாவாள் எ-று. 17

CC-0.TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

உதையநான் கேழிற்பத்தோ னொருமையாய்க்
கோசுஞ்சேர
அதையவர்கேந்திரமானா லந்தமாதாவின் சுற்றும்
சிதைவிலாசோன்வீறிற் சேய்காரிபகலோன்பாரா
வதைபிலாதிர்ப்பள்மாதா நண்ணிலி நூலதாகி

(இ-ள்) சுபரும் பாபரும் சேர்ந்து சூரியனில்லாமல் பத்தாம் இடத்திலும், பனிரெண்டாம் இடத்திலும் சந்திரன் இல்லாமல் நான்காம் இடத்திற்கு நான்காம் இடத்ததிபதி ஆசி பெறாமல் கன்னியா ராசியிலிருந்தால் ஜதானுகனுடையதாய் வெகுகாலம் தரையிலும ஜீவித்திருப்பதற்காகும் எ-று. 18

## மாதுரு காண்டம் முற்றிற்று ஆக 570

---

# பிதுரு காண்டம்

மதியவற்பெருமையாகி மற்றதீக்கோட்கள் பராரச்
சதிரதிலரசனிற்கச் சந்துருபாவையில்லா
திவர்கேந்திர நான்காய்நின்றா லேந்திழைமாதே
கேளாய்
விதியதிலுயர்ந்தமாதா மேதினியிர்ப்னூராய்

(இ-ள்) ஒன்பதாமிடத்திற்கு ஒன்பதாமிடத்திற்கு ஐந்தாமிடத்தில் சுக்கிரனும் குருவுமிருக்க அந்தஸ்தானங்களில் சந்திரவிருந்தாலும் பார்த்தாலும் தமது ஸ்தானத்திற்குடையவன் ஆக்ஷியாய் லாபஸ்தானலிருந்தால் அந்த ஜாதகன் பிதா நூறு வயது வரையிலுமிருப்பதற்காகும் எ-று. 1

சதிர்மதியிடத்தானேழோன் சத்தமஞ்சுபரேயாகிற்
கதிரரளிசேய்க்குக் கண்டுடனி ரைப்பாரா
_திர்நவமாறெட்டாகி லந்தமாதாவின் சுற்றம்
எதிரொருகுறையில்லாம லிருப்பனேவயது நூறாய்

(இ.ள்) சூரியன், உச்சமாய் கோணாதிபதிகள் ஆக்ஷியாயிருக்க கோண ஸ்தானங்களில் வளர்பிறைச்சந்திரனும் குருவுமிருக்க ராகு, செவ்வாய், சனி, புதன் முதலானோர் ஆறு எட்டு பனிரெண்டாமிடங்களிலிருக்க இந்த ஜாதகனுடைய தகப்பன் பூரணாயுசுடன் தனதான்ய சம்பத்துடன் வாழ்த்திருப்பதற்காகும் எ-று 2

CC-0TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

நாலுடனாலி நல்ல நலமுள்ளோரில்லாராகி
ஏலுள நாலேழோனும் மிருந்திட நீசமாயிச்
சேலுளமதியுமீன மாயினால் மாதே கேளாய்
பீலுள்ளவன்னை பின்புபிழைப்பதுமில்லைகண்டாய்

(இ-ள்) சூரியன் சுக்கிரன், குரு சந்திரன் ஒன்பதாமிடத்தி லிருக்க ராகு குருக்கேழாமிடத்திலிருக்க சூரியனுக்கு ஏழாமிடத்தில் சனி, ராகு இல்லாத ஜாதகனுடைய தகப்பன் சகல சம்பத்துடன் பொருந்தியவனாய் மரணமில்லாமல் பூரணாயுகடன் ஜீவித்திருப்பதற்காகும் எ-று. 8

பத்துடன் சனிசேய்தீயர் பாம்புமே நின்றாராயில்
இத்துடனான் கேழானு மிழிகுலமாயிருக்கக்
சத்துடனிருந்த நாலோர் கனங்குன்றியஸ்தமிக்கச்
செத்துடன் போவாளன்னைச் சீரணச்சந்திரனால்

(இ:ள்) ஐந்து ஒன்பதாமிடத்திலுள்ளோர் உச்சமா சூரியன் நட்பாக குருவும் சுக்கிரனும் மேற்குறிப்பித்த கிரகங்கள் நாலாம்இடத்திலிருக்க ஐந்தாமிடத்தில் சனியிருந்தாலும், சூரியனுக்கு ஏழிலாகிலும்ஐந்திலாகிலுமில்லாமல்சந்திரன்கோணாதிபதியாயிருந்தால் இந்த ஜாதகனுடைய பிதாவுக்கு தீர்க்காயிசாயிருக்கும் எ-று.

அன்னகர்மதி நான்காகவதற்குநாம் செந்திதீவண்ண
இன்னதருதையங்காரி யிருந்திடிற்சுபரில்லாமற்
பொன்னவனாரெட்டாயிப் போய்விடுமென்னை
நில்லலாள்
சொன்னவர்பெரியோரிந்தச்சோ தனைக்குறிதப்பாதே

(இ:ள்) அஷ்டமஸ்தானாதிபதியையும் சூரியனையும் சுபக்கிரகங்கள் பார்க்க சனி, செவ்வாய், ராகும் ஆறு எட்டிலிருக்க ஜனன லக்கினத்தில் சுக்கிரனும் புதனும் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் பொருள் போகாது எ-று 5

இந்தநான் கேழும்பாப ரிணியவர் நீசமாயில்
மந்தனாடனே சேரமன் மனையவன் ஸ்தமிக்யில்
அந்த நாளரசாயி யலரிரிமுதைநின்றால்
வந்தநாளன்னை தீம்பு வருமிதுகுறிதப்பாதே

(இ-ள்) குரு லக்கினத்தில் பலமாய் இருக்க அந்த ஸ்தானத்திற்கு ஐந்து ஒன்பதில் சூரியன், புதன், சுக்கிரன் சேர்ந்திருக்க சனியும் செவ்வாயும் ராகும் சேர்ந்துஏழாம்இடத்திலும்நான்காமிடத்திலும்இல்லாத ஜாதகனுடைய தகப்பனுக்கு பூர்ணாயுசாயிருப்பதற்காகும் எ-று. 6

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

குருமதுநான் கிற்கூடக் கொம்பனையானேகேளாய்
வருமதுவன்னைக்காகா வங்கிசதாசமாகும்
திருகதுமில்லைகண்டாய் செல்வருர்பாராராகிற்
கருவுடச் மாதாநாசங் கண்டிடுங்குறிதப்பாதே

(இ-ள்) கேந்திர ஸ்தானத்திற்குளதிரில் குருவும்,சந்திரனும் மிருந்தாலும் ஏழாமிடத்தில் சூரியனிருக்கு சூரியனுக்கு இரண்டு பக்கத்திலும்புதனும்,சுக்கிரனுமிர்க்க இவர்களைப் பாபக்கிரகங்கள் பாராமலிருந்தால்அந்த ஜதாகனுடை ற தகப்பனுக்கு அதிக யோகமும் தனதான்ய சம்பத்தும் பெருகி வாழ்வதற்காகும் எ-று.

பூமகனான் கினிற்கும் புண்ணியவர்பாராராகில்
ஆமவனானதிற்சோப னத்தற்குநாகிரவிநிற்கச்
சாமவனுதித்தபோதே சனியுமேயபுதையனாற்
போமதுவன்னைகூடன் பிரிவினையில்லாதாக

(இ-ள்) சூரிறனுடைய புதனும் சனி, செவ்வாயும் சேர்ந்து நான்காம் இடம் ஏழாமிடங்களில்லாமலும் சந்திரன். குருவுக்கு நான்கு ஏழாம் இடத்திலிருந்தாலும், சுககிரனுக்கு ஐந்தாமிடத் தான் நாலாமிடத்தாயிருந்தாலும் ஜாதகனுடைய பிதா தன தான்ய சம்பத்துடன் வெகுமேன்மையரய் பூர்ணாயுசுடன்ஜீவத் திருப்பதற்காகும் எ-று

மூவிருநான்கோர் கூடுமுன் சதுரத்தினிற்க
ஈரிருசதிரத்தாரு மிருநான்கலீராறாகப்
பாரிவர்க்காறெட்டாகப் ::னிமதியரவுங் கூடிச்
சூரியனுதையநின்றாற் சொல்லுவாய்மாணமன்னை

(இ-ள்) சுக்ரரனும், குருவும், ஒன்பதாம் இடத்திலிர்க்க சூரியன் லாபஸ்தானத்தில் வளர்பிறைச்சந்திரன் லக்கினத்தி லிர்க்க பாபக்கிரகங்கள் பாராதிர்ந்தால் பிதுருக்கு நல்ல யோகமும் பூர்ணாயுசுமாயிருப்பதற்கும் எ-று

நிலமகனீலன்கூடி நிற்கவேயதுநான்காகச்
சிலைமதனீனமாகச் சீணமாய்நின்றானாக
நலமில்லாச்சுபர்பாராத தாயினுமாசதகேளாய்
சொல்விதிவேறேயில்லைச் சுத்தமாயன்னைசாவள்

(இ-ள்) ஒன்பதாம்இடத்தில் பாபகிரகங்களில்லாமல் சுபக் கிரகங்களிர்ந்தாலும் பார்த்தாலும் சுபக்கிரங்கள் சேர்ந்திருத் தாலும் சிம்மலக்கிம் கன்னியாலக்கினத்தி பிறந்த ஜாதக னுடைய பிதா நூறு வயது வரையிர்ப்பதற்கும் எறு 10

CC-0.TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

இரவிநான் கிருக்க வேழி லிளமதிசனியுங்கூடப்
பரவிநான் கேழிற்பூமன் பாம்புமேபுதையநிற்க
உரவிலாதிருக்கநல்லோ ரொருவரும்பாராக
அரமிலாதிருக்குமன்னை யன் றிரவதனிற்சாவாள்

(இ-ள்) குரு நீசமாயிருக்க ஐந்து ஒன்பதில் செவ்வாயிருக்க சனி லக்கினாதிபதியுடன் சேர்ந்துதுபனும், சுக்கிந்னும் பாராம லிருந்தால் ராகு சந்திரனுக்கேழாம் இடத்திலிர்க்க இந்த ஜாதக னுடைய பிதா மாரகமடைந்திருப்பதற்காகும் எ-று 11

இதுவாகவிருக்கத்தீய ரிதிற்குருசுங்கன் பார்க்க
மதிமாகச் சிறுநோக்குடைய மேதினியிருப்பானாக
அதுவாகவைந்தாறான லன்னையுமரணவாள்
பொதுவாகச்சுபரே கூடி போகுமெட்டாண்டிலன்னை

(இ-ள்)குரு எட்டாமிடத்திலும்சூரியன் பனிரெண்டாமிடத் திலிர்க்க அவருடன் சனிகூடிநிற்க, ஒன்பதாமிடத்ததிபதியுடன் செவ்வாய் சேர்ந்திருக்க சூரியனுக்கும் ஏழாமிடத்தில் சந்திரனி ருக்க ஜாதன் பிறப்பதற்குமுன் தந்தை மரணமாவதற்காகும் எ-று. 12

சுபர்பாயிகூடி நான்கிற் சுத்தமாய்மதியோடரால்
அவர்கூடிச்சுத்தநான் மோ னரவமுங்கூடி நிற்க
இவருடனில்லாதாக விருந்திடிலுதயத்தானும்
நவமுறுகாதேகேளாய் நானான்குல்வீயுமன்னை

(இ-ள்) சுக்கிரன் அஸ்தமனமாதிருக்க குரு நீசமாயிருக்க அவர்களுக் கோழாமிடத்தில் செவ்வாயும்சனியுமிருக்க ஒன்பதா மிடத்தில் ராகும், சுக்கிரனும் என்பதாமிடத்ததிபதியும் நாலா மிடத்திலிர்க்கும்போது பிறந்த ஜாதகனுடைய தகப்பன் மரண மாவதற்காகும் எ-று

சுத்தமும் பாபிகூடிச் சூரியனுடனேயில்லா
சத்துமுந்தான் குமேழிற் பணிமணியொருவனில்லா
அந்த முந்நான்கு நான்கோ னாட்சியில்லாமலில்லா
நித்தமுங்கன்னியாகி நெடுங்காலமிருப்பாளன்னை

(இ-ள்) குருவுக்குஏழாம்இடத்தில் செவ்வாயிருக்க ஒன்பதா மிடத்தோன் அஸ்தமயமாய் மூன்றாமிடத்திலாயினுமிருக்க சனி யும், சூரியனும் நான்கமிடத்திலிருக்க ஜனன லக்கித்தில் ராகு இருக்கும்போது பிறந்த ஜாதகனுடைய பிதா மரணமாவதற் காகும் எ-று. 14

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

ஒன்பதுக் கொன்பதைந்தில் வெள்ளியோனரசனிற்க
இன்பகிக்கினிரோடே யிந்துவுங்கூடப்பார்க்கில்
தன்பதிக் கிரணணாட்சித் தானுமேலாபமாகில்
அன்பதுக்கன்பதர்சி யவன்பிதா விருப்பனூறாய்

(இ-ள்) சனியும் சூரியனும் நான்காமிடத்திலிருக்க ஒன்பதாமிடத்தானும் செவ்வாயும், புதனும், சந்திரனுக்கு நாலாமிடத்திலும், சனிக்கு ஏழாமிடத்திலிருக்க அவர்களை புதனும் சுக்கிரனும் பாராமலிருந்தால் ஜாதகன் பிறப்பதற்கு முன்னமே தகப்பன் மரணமாவதற்காகும் எ-று 15

இரவியுமுரசமாகிக் கோணருமாட்சியாகப்
பரவியகோணந்தன்னிற் பருமதிபரசனிற்க
அரவுசேய்முடவன்புந்தி யாறெட்டுபனிரண்டாகில்
திரவியமுடையயோளாகித் தீர்க்கமாயிருப்பன்றத்தை

(இ-ள்) சூரியனுக்கு முன்னாள் சனியிம் பின்னால் செவ்வாயும் அஸ்டமஸ் தானத்தில் சுக்கிரனும், குருவுமிருக்கஒன்பதாமிதுத்ததிபதியும் ராகும் சேர்ந்து சனிக்கு ஏழாமிடத்திலிருக்க சந்திரனும் புதனும் ராகுவுக்கு நாலாமிடத்திலிருக்க சந்திரனும் புதனும் ராகுவுக்கு நாலாமிடத்திலிருக்கும் போது பிறந்த சாதகனுடைய பிதா மரணமாவார் எ-று 19

பகல் பக்கஞ்சுங்கன் ராஜன் பருமதியொன்பதாகில்
இகலினியோனும் ராஜற் கேழிடமாகிநிற்க
அலமூவர்க்கேழிற்காரி யரவசேய்நில்லாதாகிற்
சகலமுடையோனாகச் சாவின்றிப்பிதாவுநிற்பன்

(இ-ள்] சந்திரன், குருவுடன் சேர்ந்து ஒன்பதாமிடத்திலிருக்க மற்ற கிரகங்கள் அவர்களைப் பாராமலிருந்தால் அந்த சாதகன செய்யும் கொடுமைகள் பிதாவுக்காமல் மரணமாகும் படியாய் நேரிடுகமன்றறி மாதே எ-று 17

அஞ்சொன்பதுள்ளோருச்சாமாயிரங்கதிரோனட்பாய்
இஞ்சொன்மாமறையோன்சுங்க னிவர்க்குமேநான்
கேழாகிற்
பஞ்சமாய்ப் பாபிநீலன் பாற்கரற்கேழைந்தில்லாச்
செஞ்சோமன் கோணநின்றாற் றீர்க்காயுபிதாவுக்
குண்டே

(இ-ள்) சனியும் செவ்வாயும் சேர்ந்து ஒன்பதாமிடத்திலிருக்க அவர்களைச் சந்திரன் பாராமலிருந்தால் அந்த சாதகனுக்கு சதோதரரில்லாமல் தனது தகப்பனுக்கும் மரணமுண்டாகும் [illegible] மாதே எ-று 18

CC-0. Old Tamil Texts, Digitized by Sri Muthulakshmi Research Academy

எட்டோனுமெட்டுவீடோ னிரவினே கபரேபார்க்க
மட்டிருகரிசேய்பாப்பும் விட்டிவர்காறெட்டாக
விட்டொருவுதையந்தன்னில் வெள்ளியும் புசனு
நின்றார்
பொட்டெனப்பிதாவின் பாக்யம் போகாது கேளாய்
மாதே

(இ-ள்) நான்கு பாடகிரகங்கள் சேர்ந்து பாராமலிருக்க அந்த ஜாதகனுக்கு முன்னால் தாய்க்கு கண்டமுண்டாகும் மாதே இந்த குறி தப்பாதென்றுணர்வாய் எ-று 19

ஆரியன் பெலத்துநிற்க வதர்க்கைந்தொன்பதினில்
ராஜ
சூரியனுடனே புந்தி சுக்கிரன் கூடநிற்க
காரியுமாரல்பாப்பு கலந்தேறினான் கிலில்லா
மாரியென்மேகப்போல வருஷிக்கும்பிதாவுக்காயுள்

(இ-ள்) சனி நாலாம் இடத்திலிருக்க சூரியனும், ராகும் நான்காமிடத்திருக்க ஒன்பதாமிடந்தான் இருக்கும் ஸ்தானத்திற்கும் செவ்வாய்க்கும்-நான்காம் இடத்திற்கும். நாலாவது ஸ்தானத்தை சுபக்கிரகங்கள் பாராமலிருந்தால் அந்த ஜாதகனுடைய பிதாவின் கண்டத்தவறாமல் போகும்படியான மாரகமுண்டாகும் எ-று 20

சதிரெதிராஜன் சோமன் சத்தமமிரவிற்கக்
கதிருபக்கமாகக் கணக்கனும் வெள்ளிநிற்க
இதற்கெதிர்பாபர்பாரா திருக்கினுமாதேகேளாய்
பிதுர்க்கதியோகமாகிப் பேருளோனாகிவாழ்வன்

(இ-ள்) ஏழாமிடத்திலும் உதய லக்கினத்திலும் பாபக்கிரகமிருந்து சுபக்கிரகங்களில்லாமல் சுக்கிரனின்றால் ஏழாமிடத்தானுக்கு பக்கத்தில் சூரியனும், செவ்வாயும் சேர்ந்திருந்தால் அந்த ஜாதகனுக்கு மிகவும் தாழ்வான நிலையாயிருந்து நிற்கும்படி யான குறி தப்பாது எ-று 21

பிதுரு காண்டம் முற்றிற்று. ஆக, 591

---

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

# களத்திர காண்டம்

கனலவனுடனேபுந்தி காரிசேய்நான் கேழன்றிப்
புனைலமிடத்தான் சோபன் பொன்னுக்குநான்
கேழாகில்
அகல்தெள்ளிக்கைந்தோனாலே யூாகினுமாதே
கேளாய்
சுழல்கொண்டுபிதாவின் யோகஞ் சொல்வைமநேக
முண்டே

(இ-ள்) சனிக்கு, ஏழாம் இடத்தில் சுக்கிரன் நீசமாயிருக் கந்திரன்வீட்டுக்கெதிரில்புதன் இர்க்கசப்தமாதிபதி செவ்வாய்க்க கும் சூரியனுக்கு நான்காம் இடத்திலிர்ந்தால் அந்த ஜாதக னுக்கு களத்திர நாசம் பலிக்காது எ-று

வேறொருகுறையில்லாமல் வெள்ளிபொன்னவமிருக்க
தானொருமறைவில்லாமற் றனியனாயிரவிலாபம்
ஆறொருகலையினூடே யம்புலியுதைநிற்க
வீறிலாப்பாபர்பாரா ராயினும்பிதுர்க்யோகம்

(இ-ள்) குருமூடமாயிர்க்க,செவ்வாய் ஏழாம்இடத்திலிர்க்க ராகுடனே ஏழாமிடத்திபதிசேர ராகுக்கு நாலாம் இடத்தில் சுக் கிரநிர்க்க சனியும் சேர்ந்திர்க்க நாலாமிடத்திலிர்க்க மனை யானிறந்தபோவாள் எ-று 2

நவமதிற்பாபரன்றி நலமூளோரிருக்கப் பார்க்க
மனமதினலத்தநல்லோர் மகிழ்ச்சியாய்க்கூடி நிற்க
வனமதின்மிருகமேறி வல்லவன் கன்னியாகில்
இனமதின் மிகுதியாக விருப்பனேபிநாநூறாக

(இ-ள்) லக்கினாதிபதி ஏழாமிடத்தானும் சேர்ந்து சனிக்கு நான்காமிடத்திலிருக்க, குரு ஏழாம் இடத்திலிருக்க அந்த ஸ்தா னத்திற்கு நான்சில் சுக்கிரனிருக்க செவ்வாயும் சேர்ந்துசுபக்கிர கங்களின் பார்வை படாமலிருந்தால் மனையாள் மரணமடை வாள் எ:று. 3

ஆரியனீசமாக வைந்தொன்பதாரநிற்க்க்
காரியென்றலறத்தோன்கூடிக் கணக்கனும்தெள்ளி
பாரா
வீரியவிடையினால் வெண்கதிர்க்கேழாயாகிற்
பாரினுதியாமுன்னே பிதர்பதஞ்சோரரநிற்பன்

CC-0.TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்) லக்கினாதிபதி நீசமாய் ஏழுக்குடையோன் நீசமா பின்னாலிருக்க குருவும் பனிரெண்டாம் இருகக செவ்வாயும் சுக்கிரனும் அவருடனே இருக்க ஜனனலக்கினந்தில் சனியிருக்க அவருடனே சூரியனும் ராகும் இருக்க தேய்பிறைச்சந்திரனா யிருந்தால் மனைவியர்களுக்கு மரணமுண்டாகும் எ-று.

செங்குருவெட்டி நிற்கத் திவாகரன்பனிரண்டாச
அங்கொருசனியுங்கூட வராலுநவத்தோன் சேர
இங்கொருநவந்திர்ப்பாம்பு மிரவிக்கேழ்மதியுமானார்
பின்கருவுதியாமுன்னே பிதுர்படிந்திருக்குமாதே

(இ-ள்) தனஸ்தானாதிபதி பகை நீச்சஸ்தானத்தில் இருக்க ஏழாம் இடத்ததிபதி நீசமாயிர்க்க சந்திரனும் சனியும் சேர்ந்து சுக்கிரனும் அவருடனே இருக்க ஜனனலக்கினத்தில் சனியிருக்க அவருடனேசூரியனும்ராகுமிர்க்கதேய்ப்பிறைச் சந்திரனாயிருந் தால் மனைவியர்களுக்கு மரணமுண்டாகும் எ.று,

வெள்ளியோனஸ்தமிக்க வே ந்தனுநீசமாகத்
துள்ளியேயதற்கேழ்செவ்வாய் சூரியன்புதல்வனிற்கத்
தெள்ளியநவத்திர்ப்பாம்புதிவ கரனவத்தோநான்கார்
அள்ளியகுழவிமுன்னே யவன்பிதாமரணமாவான்

(இ-ள்) சனியும் செவ்வாயும் சேர்ந்திர்க்க ஏழாம்இடத்தில் சூரியனும் ராகுமிருந்தாலும் பனிரெண்டாம் இடத்தில் ஏழாம் இடத்திலிருந்தாலும்ஜாதகனுடைய மனைவிகள் மரணமாவார் கள் எ:று 6

பொன்னவர்கேழிற்பூமன் பொருந்தியநவத்தோனஸ்
நின்றவர் முன்றைந்தாகி நீலனுமிரவிநான்கார தம்
என்றவனுதித்தபோதே யிருந்திடிலுதையம்பாம்பும்
கொன்றிடுப்பிதாவைத்தேடுங்கனகணைவிருபின்னே

(இ-ள்) குருவும் சந்திரனும்ஏழாம் இடத்திலிருந்தால் இவர் கள் குற்றமில்லாத சுபக்கிரகங்களென்று சொல்லவேண்டாம் மனைவியாளின் தாய்வீடு போய் வாழுஞ்சுடுகாடுபோல அவள் தாய்வீடு நாசமாவதுடன்மனைவியாளும்மரணமாவாள் மாதே எ:று 7

நீலனுமிவிநான்காய் நிற்கினுநவத்தோன்பூமன்
மாலெனுமதிக்கு நான்காய் பந்தனுக்கேழாயாகிற்
காலனும் ததாவைத்தேடுங் கனகனும்வெள்ளிபாராப்
பாலனைப்பெறுமுன்னேம பட்டினம்பிதுந்தான்
போவன்

(இ-ள்) சுக்கிரன்மீனத்திலிருக்க குருவுக்கு ஏழாம் இடத்திற் கேழாய் ராகும், சனியும் இருக்க, இவர்களுக்கு நாலில் ஜனன லக்கினம் இருக்க சூரியன் ஏழாமிடத்திலிருந்தால் மனையாள் மரணமாதே எ:று 8

CC-0.TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

இரவிழுன் னிலன் பின்னேயிருநான்கில் வெள்ளி
பொன்னும்
அரவுமோர் நவத்தோன்கூடியந்த நீலக்கேயேழிற்
பரவிரசோமன் புந்திபாம்புக்கு நான்சேயாகில்
மருவுறுங்குழவிமுன்சே மாண்டிடும் பிதாவுமாதே

(இ-ள்) ஏழாமிடத்ததிபதி ஆக்ஷியாயிருக்க இரண்டு பக்கத்திலும் பாபகிரகங்களிருந்தால், சுக்கிரன் செவ்வாயுடனே சேர்ந்து ஏழாமிடத்தில் சந்திரன் குரு, புதன் முதலலானோர் பார்வை செலுத்தாமலிருந்தால் ஜாதகனுடைய மனையாளிறப்பதுடன் அவன் உடைய வாழ்வும் குலைந்து போகும் எ-று 9

மதியரசோடிகூடி மகிழ்ச்சியாம் நவத்திநிற்க
மிகுதியோரவரைப்பாரா திருக்கிலுமாதே கேளாய்
சதியவர் செய்யுந்திமை சத்துரு பிதாவுக்காகா
விதியகு முடியுந்தப்பாக் குறியிதுகூறாய்மாதே

(இ-ள்) சுக்கிரன் சுபஸ்தானத்திலிருக்க பாபக்கிரகங்கள் சுற்றமிருக்க சூரியனுடன் ஐந்து ஏழுக்குடையவர்கள் சேர்ந்திருக்க இவர்களை சுபக்கிரகங்கள் பாராமலிருந்தால் களஸ்திரம் மரணமாவாள் மடிவாள் இநதக்குறி தப்பாது எ-று 10

மந்தன் சேயிருவர்கூடி மகிழ்ச்சியாய் நவத்திநிற்க
இந்தவரவரைப்பாரா திருந்தவரவரேயானால்
அந்தமாய்ப்பிறப்புநோக்கிலப்போதேமடி வுண்வுக்கிச்
சொந்தமாய்ப்பிதாவைக்கொல்வர் சொல்குறிதப்பா
மாதே

(இ-ள்) சுக்கிரனும் ஏழாமிடத்ததிபதியும் எந்த ஸ்தானத்திலாயினுமிருந்து சுபக்கிரகங்களுடன் சேர்ந்தாலும் பார்வை பெறாமலிருந்தாலும், சாதகருடைய மனைவியாள் கற்பு நிலை தவறாத உத்தமியான பதிவிரதையாயிருப்பதற்காகும் எ-று 11

நாலுபேர்பாபர்கூடி நவத்தினிநின்றாராகிற்
கோளுயர்பெரியோர் நல்லோர் கூடியேபார்க்கிலன்றி
வாலிபந்திரும்பவந் க்குழவிமுன் பிதாவின் கண்டம்
ஆலுகந்தமர்ந்தமாதே யதுகுறிதப்பதாகும்.

(இ-ள்) ஏழாமிடத்தில் சுக்கிரனுடனே சிபக்கிரகங்கள்சேர்ந்திருந்த இவர்களை பாபக்கிரகங்கள் பார்வையிடாமலிருந்தால்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

ஜாதகனுடைய மனையாள் மேலும் மேலும் விருத்தியாகி குடும்ப சகியாயிருப்பதற்காகும் எ-று 12

நவத்திடகரிநான்காக நாகமுரவிநான் காய்ச்
செழிந்திட நவத்தோனிற்குஞ் செவ்வாய்க்குநாலகே
மதித்திட நல்லோர்பாராகினுமாதே சேளாய் யாகி
குறித்திடும்பிதாவின் கண்டங்கொண்டுபோங்
குறிதப்பாதே

(இ-ள்) ஏழாமிடத்திற்கிரண்டு பாபக்கிரகங்களில்லாமல் இரண்டு பக்கத்திலும் சுக்கிரனும், சுபக்கிரகங்களும் பாபகிர கங்களும் சேர்ந்தாலும் பார்த்தாலும் ஏழாமிடத்ததிபதி ஐந்தாமிடத்தில் வல்லமையாய் நின்றால் அந்த சாதனுக்கு தாழ்வும் பயமில்லாமல் சிறந்தவளாம் ஒரு மனைவியாயிருப்ப தற்காகும் எ-று 13

ஏழிடமுறையைப்பா யிருக்கினு நல்லோரன்றித்
தாழ்வுடன்சுங்கநிற்கச் சனிக்கு நான்குகாகிநிற்கத்
சூழிடமேழோன் பக்கல் சூரியனாரால் கூடில்
தாழ்வுடன் குஞ்லந்து நிற்கும் வருமிதுகுறிதப்பாதே

(இ-ள்] சுக்கிரன் ஆக்ஷியாயிருக்க ஏழாமிடத்திற்குடை யோர் நட்பாக குரு ஏழாமிடத்திலும் சந்திரனுக்கு ஏழில் சுக்கி ரனுமிருந்தால் சுபக்கிரகங்களுடனே அசுபக்கிரகங்கள் சேராம லிருத்தாலும் ஆறு எட்டாமிடத்லிருத்தாலும் அநத ஜாதகனு டைய மனையாள அநேக நாள் வரையிலுமிருப்பதற்காகும் எ-று 14

மந்தனார்க்கேழிற்சுங்கன் மனையவனிசமாக
வந்தநாளுடையோன் சோமன்மனைக்கெதிர்புந்தியா
இந்தவேழுடையவன் சேய்கே யிரவிக்குநான்கா
நின்றாற்
பந்தயமாய்ச்சொல்வாய்மாதே பலியாதுகளத்திர நாசம்

(இ:ள்) லக்கினாதிபதி ஆக்ஷியாக குரு லக்கினத்திலிருக்க லக்கினாதிபதி உச்சமாயிருக்க அவர்களுக்கேழாமிடத்தில் வளர் பிறைச் சந்திரனிருக்க சனியையும் செவ்வாயையும் சூரியன் பாராதிருந்தால் அந்த சாதகனுடைய மனையாள் நூறு வரு ஷம் வரையிலிருப்பாள் இந்த குறிதப்பாது மாதே எ-று 15

குருமூடமாகிநிற்கக் குசனுமேயேழிற்சேர
அருகாடாவர்த்தினேலாய்ப்பாங்குள்ளசுங்கனிற்கக்
பழுவாடாவர்த்தினாலாய்ப்பாங்குள்ளசுங்கனிற்கக்
கரிகூடநாகேயாகிற் களத்திரபிறந்துபோமே

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்) சந்திரனும் குருவும் பத்தாமிடத்திலிருக்க குருவுக்கு நாலாமிடத்தில் சுக்கிரனிருக்க ஏழாமிடத்தில் பாபகிரகங்கள் ஆக்ஷி உச்சமாயிருந்தால் ஜாதகுனுக்கு களத்திர பாக்கிய மக் மேருகிரி வளருவது போல பெருகும் எ-று. 16

உதையமேழுடையோன்கூடவொருமையாய்ச்
சனிக்கு நான்காய்
மதியமேழிடத்தில்வேந்தன் மனைக்குநால்
சுங்கனிற்கச்
சிதையவேயுதையஞ்செவ்வாய் சேரவேசுபர்பார்
பின்றேற்
கதையதாய்மூடியும்பின்னே களத்திறமிறந்துபோமே

(இ-ள்) தனசப்தமாதிபதி நட்பாகத் தனியாக இராமல் சுக்கிரன் புதன் ஏழாமிடத்திற்கு நான்காமிடத்தில் பாபகிரகங்கள் பாராமலும் லக்கினத்திற்கு ஏழில் குருவிக்க சந்திரன் உதயத்திலிருந்தால் சப்தமேகம்போல மனையாள் தனக்கு ஆதாரமாயிருப்பதற்காகும் எ-று. 17

பெற்றவனீசமாகப்பின்னே களத்திறமிறந்துபோமே
கொற்லவன்பனிரண்டாகக் குசன் வெள்ளிகூடநிற்க
உற்றவனுதையங்காரி யொருபகலாவுநின்றாற்
செத்திடுங்களத்திரமெல்லாஞ் சீர்ணசந்திரனே
யானால்

(இள்) ஜனன லக்கினத்தில் புதனும் குருவுமிருக்க சூரியனுக்கு முன்னாள் சுக்கிரனிருக்க சனி, புதன், செவ்வந்ய், இராகு மேற்குறிப்பித்த கிரகங்களுடன் சேராமலிருந்தால் சாதகனுக்கு கதிதிதர யோகமுண்டாயிருக்கும் எ-று. 18

தனமவர்குன்றிநிற்கத் தாழ்வுதேயேழோனிசம்
மனதவன்காரிகூடமங்களசுங்கன்சேர
இனன்மதனரவங்கூடி யிவர்நடுவாகனின்றாற்
சினமதுநில்லாதாகுஞ் செத்திடுங்களத்திரமெல்லாம்

(இ-ள்) லக்கினாதிபதி தன் சப்தமாதிபதி சுபர் அங்கிசத்திலிருக்க குரு, சந்திரன, சுக்கிரன், புதன் சேர்ந்தாலும் பாக்த்நாலும் சனி, செவ்வாய் சூரியன், ராகு பார்வை செலுத்தாமல் மறைவு ஸ்தானத்திலிருந்தால், சாதகன் ஒரே மனையானை மணந்து மகமேருபோல ஓங்கி வளர்ந்திருப்பதற்காகும் எ-று,19

## களத்திர காண்டம் முற்றிற்று ஆக 610



CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

# தனாதிபலக் காண்டம்

---

நீலனுமாரல்கூடி நிற்கவேயேழிற்றானும்
கோலாவிரவிசுங்கன் கூடியேநின்றாராகில்
லேலெனுமேமேழோனீரா நிருக்கினுமாதேகேளாய்
காலனேர்களத்திரங்கள் கருவறுங்குறிதப்பாதே

(இ:ள்) லக்கினத்திற்கு எட்டாமிடத்தானுடன் சேர்ந்த சூரியனும் விரயஸ்தானா திபதியும்மாரகஞ்செய்யும் படியான பகை கிரகங்களாயிருப்பார்களானால் சகலருக்கும் பகையாயிப் பார்கள். எ-று.

குருமதிகூடியேழிற் கோலமாய் நின்றாராகில்
மருவிலர்சுபரமென்மு மகிழ்ச்சியாய்ச் சொல்லவேண்டாம்
வருமதுகளத்திவானி வங்கிச நாசமாகும்
திருகதேயில்லைகண்டாய் தெரிந்துரைகுறிதப்பாதே

(இ-ள்) பூரணச்சந்திரனுக்கு, கொடியோரெவர்களெனில் வக்கி நீசமில்லாத குரு பனிரெண்டு எட்டாமிடத்திலிருந்தால் ஜாதகன் சகலருக்கும்பகையாயிரும்பானென் றுரைப்பாய்மாதே எ-று, உ

வெள்ளியுமீனமாக வியாழமுமேழுக்கேழாய்
பிள்ளியினரவங்காரி பொருந்தியேயிவர்க்குநான்காய்
தெள்ளியவுதையஞ் சேசய்க்குச் சீருடனிரவியேழில்
துள்ளியேநின்றாராகிற் றுணைவிபோங்குறிப்பாதே

